பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 08 திங்கட்கிழமை (24.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 27

# மன்னாரில் பொலிஸார் அட்டகாசம்! கடைகள் உடைப்பு; நகரில் பதற்றம்!!

## தமிழர், முஸ்லிம்கள் 100 பேர் கைது

மன்னார், டிச. 24

மன்னார் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இனம்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாரும் படையினரும் நேற்றுப் பெரும் அமர்க்களம் புரிந்தனர்.

பொலிஸாரும் படையினரும் நேற்றுக்காலை நகரப்பகுதியைச் சுற்றிவளைத்து பாரிய தேடுதல் நடத்தினர். இந்தத் தேடுதலில் சுமார் நூறு தமிழ், முஸ்லிம் மக்கள் கைது செய்யப்பட்டனர். தமிழ், முஸ்லிம்களுக்குச் சொந்தமான வீதியோரக் கடைகள் மற்றும் தற்காலிக விற்பனை நிலையங்கள் படையினராலும் பொலிஸாராலும் அடித்து நொறுக்கப்பட்டன. இதனால் அங்கு நேற்றுக்காலை முதல் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் - மக்கள் பெருமளவில் கூடத்தொடங்கிய நேரத்தில் - நகருக்குள் பிரவேசித்த நூற்றுக் கணக்கான படையினரும் பொலிஸாரும் சுற்றிவளைப்புத் தேடுதலை ஆரம்பித்தனர்.

முக்கிய வீதிகள் மூடப்பட்டு பொதுமக்கள் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டனர். அடையாள அட்டைகள் மற்றும் உரிய ஆவணங்களை வைத்திருந்தும் கூட சுமார் நூறு பேர் வரையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

வியாபாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் தள்ளுவண்டில்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் படையினர் பறிமுதல் செய்துகொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளால் மன்னார் நகரில் பதற்றம் ஏற்பட்டது. வர்த்தகர்கள் பலர் தமது கடைகளைப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் சென்றனர். நத்தார் பண்டிகைக்காக பொருள்கள் வாங்குவதற்கு நகருக்கு வந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வாகனத் தொடரணியால் உண்டாகும் பாதிப்பை நீக்கத் தளபதி வாக்குறுதி

## பயண அனுமதி முறையும் இலகுவாக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

குடாநாட்டில் - பலாலி, பருத்தித்துறை, தென்மராட்சி ஆகிய பிரதான பாதைகளில் படையினரின் தொடரணிகள் ஒழுங்கு முறையின்றிச் செல்வதல் மக்களுக்கு உண்டாகும் பாதிப்புகள் அடுத்த மாதத்தில் நீக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டப் பயணத்துக்குப் பாதுகாப்பு அனுமதி பெறுவதில் உள்ள தாமதங்களையும் கஷ்டங்களையும் நீக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

பலாலியில் நேற்று நடைபெற்ற சந்திப்பு ஒன்றின்போது, யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இந்த வாக்குறுதிகளை அளித்தார்.

பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தளபதிக்கு எடுத்துக் கூறி அவற்றைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்; அப்போது அவர் மேற்கண்ட உறுதிமொழிகளைத் தெரிவித்தார்.



யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம், மக்கள் குழுவின் பிரதிநிதி எஸ். பரமநாதன், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சோதனை நிலையங்களை மாற்றி அமைத்து மக்களின் அசௌகரியங்களை போக்குக

## யாழ். மாவட்ட நீதிபதி விக்னராஜா வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிச. 24

கொழும்பு உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் - வழிகாட்டலில் - கொழும்பில் படையினரின் சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டதைக் கருத்தில் கொண்டு, யாழ். மாவட்டத்திலும் கள நிலைமைகளுக்கு ஏற்ப சோதனை நிலையங்களை மாற்றி அமைத்து மக்களின் அசௌகரியங்களைத் தவிர்க்க வேண்டும்.

பலாலியில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் யாழ். மாவட்ட நீதிபதி. இ.த.விக்னராஜா இவ்விடயத்தை படைத் தரப்பினரிடம் வலியுறுத்தினார்.

கொழும்பில் பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட சோதனை நிலையங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தல்களை - வழிகாட்டல்களை - பின்பற்றி யாழ்ப்பாணத்திலும் மக்களுக்கு வசதி செய்யப்படவேண்டும்.

மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தவிர்க்கப்படவேண்டும் - என்று மாவட்ட நீதிபதி வலியுறுத்தினார். (அ-1)

## செவ்வாய், வியாழனில் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 24

காங்கேசன்துறையில் இருந்து நாளை செவ்வாய்க்கிழமையும் பின்னர் வியாழக் கிழமையும் பயணிகள் கப்பல் சேவைகள் இடம்பெறும் என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை பயணம் செய்வதற்கென்று செயலகத்தில் அனுமதிச் சீட்டைப் பெற்றவர்கள் வியாழக்கிழமை கப்பலில் பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## 48 மணி நேர போர்நிறுத்தத்துக்கு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்று தொடக்கம் 48 மணிநேரம் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு கத்தோலிக்க திருச்சபை கோரியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமும் இக்கோரிக்கையை திருச்சபை விடுத்துள்ளது. (அ-1)

## கருணா விவகாரத்தில் இலங்கை அரசின் விளக்கத்தை ஏற்க மறுக்கின்றது பிரிட்டன்

லண்டன், டிசெ. 24

கருணாவிற்கு இராஜதந்திரக் கடவுச் சீட்டை வழங்கிய விவகாரத்துடன் தனக்கு தொடர்பேதுமில்லை என இலங்கை அரசு தெரிவிப்பதை பிரிட்டன் நிராகரித்துள்ளது.

மேலும், இது தொடர்பாக எவ்வாறான அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்பது என்பது குறித்தும் பிரிட்டன் பரிசீலனை செய்து வருகிறது. கருணா இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெறுவதற்கு இலங்கை அரசு உதவியது என்பதற்கான ஆதாரங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

நத்தார் பண்டிகையை முன்னிட்டு கிறிஸ்தவ மக்களின் இரவு வழிபாட்டுக்காக குடாநாடு மற்றும் தீவுப் பகுதிகளில் இன்றும் நாளையும் இரவு ஊரடங்கு தற்காலிகமாக தளர்த்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்புப் படைகளின் பலாலி தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

கிறிஸ்தவ மக்களின் நன்மை கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள் யாவும் 31-12-07 முன்

அநேகரின் வேண்டுகோளுக்காக
வார நாட்களிலும்
விரிவுரைகள் ஆரம்பம்

2008ம் ஆண்டிற்கான
NEW BATCH

O/L தகைமையுடன் 2 வருடங்கள்

1st Semester யைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய போது...



Degree
Certificates awarded by
Trinity University (USA Spain)
OR
Institution of British Engineers
AND
காமராஜர் பல்கலைக் கழகத்தின் Post Graduate Diploma
வை ஒரு வருடத்தில் பெறமுடியும்
சர்வதேச அங்கீகாரமுடைய
3 பல்கலைக்கழகங்களுடன்
எம்மூடாக இணையும்
அரிய வாய்ப்பு





நீங்கள் ஒரு பட்டதாரியாக இருந்தால் ஒரு வருடத்தினுள் கணினிப் பட்டதாரியாக முடியும்

சகல Diploma வகுப்புக்களும் ஆரம்பம்

O/L மாணவர்களுக்கான

Diploma in Office
Diploma in Hardware Eng.
Diploma in DTP

Unlimited Time
Personal Class
Unlimited Practicals

தொடர்புகளுக்கு
Prof. A. Sanmugadas, Administrative Advisor.

சங்கானையில்
NORTH LANKA IIT
The Srilankan Center of Trinity University USA
Main Street, Chankanai. 060 2214305

யாழ்ப்பாணத்தில்
NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction, Jaffna.
Specially for workers ............

சுழிபுரத்தில்
NORTH LANKA IIT
Near Kaluvan Junction,
Chulipuram.


## யாழ்.மாநகரசபை நடத்தும் சமயஅறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 24

கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும் சமய அறிவுப் பரீட்சையை யாழ்மாநகராட்சிமன் சைவசமய விவகாரக் குழு நடத்தவுள்ளது. செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.

இப்பரீட்சைக்கு 9,795 மாணவர்கள் தோற்றவுள்ளனர். மாணவர்களுக்கான அனு மதி அட்டைகள் யாவும் பாட சாலை அதிபர்கள் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள் ளதாக சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ்.மாநக்ர ஆணையாளருமான மு. செ.சரவணபவ தெரிவித் துள்ளார்.

(அ-115)

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஐயனார்புராண வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், டிசெ.24

வட்டுக்கோட்டையூர் புலவர் மணிபண்டிதர்க.மயில்வாகனனார் ஆக்கிய 'ஆண்டிச் கோணி ஐயனார் புராணம்' வெளியீட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் கலந்து கொள்வார்.

(அ-1)


THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம். By: விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426 (302), K.K.S வீதி,
யாழ்ப்பாணம்(சனி, ஞாயிறு)
பிளாக் வீதி, சங்கானை
"THE ROYAL IS THE BEST"



## இன்று விழித்து விடு!

*எட்டமுடியாத வாழ்க்கைச் செலவை*
*எட்டிட இன்னொரு வருவாய்!*
*சிறு தொழிலொன்று உங்கள் - வசமானால்,*
*நாளைய வாழ்வு போராட்டமாகாது!*

11 வருட காலமாகப் பல அழகுக்கலை, ஓவியக் கலைஞர்களையும் சிறுதொழில்; சுயதொழில் வல்லுநர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் "தூரிகை" உங்களையும் வரவேற்கக் காத்திருக்கின்றது.

புதிய பயிற்சிப் பிரிவுகள் ஆரம்பம்

கேக் ஐசிங், உடையமைத்தல், Hair style, Make-up, துணிவர்ணமிடல், சாறி - சல்வார் அலங்கார வேலைகள், கம்பளி உடை பின்னுதல், முத்துமாலை வடிவமைப்பு, ஓவியக்கலை, ஓர்கன் இசைப் பயிற்சி

பயிற்சிகள் ஆரம்பம்

2.1.2008(புதன்)
காலை: 10 மணிமுதல்

★ 3 பயிற்சிகள் பெறுவோருக்கு மேலும் ஒரு பயிற்சி "இலவசம்"
★ பயிற்சி முடிவில் சான்றிதழ்.
★ பதிவுகள் முன்னரே மேற்கொள்ளல் வேண்டும்

**தூரிகை**
*நுண்கலை வளாகம்,*
*ம.ம.வி. வீதி, நெல்லியடி.* (69281)


## வீடு வாடகைக்கு வேண்டும்

அரசதுறை அதிகாரி ஒருவருக்கு இரு படுக்கை அறைகள், கராஜ் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு வேண்டும். வண்ணார்பண்ணை, சுண்டுக்குளி அல்லது நல்லூர்ப் பகுதி விரும்பத்தக்கது. 222 3081 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தப்பிள்ளை பவளம்



விளையாட்டு அரங்கு வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை - பவளம் நேற்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பிள்ளையின் அன்பு மனைவியும் தில்லைநாதன், பரமநாதன் (கனடா), பேரின்பநாயகி(கனடா), யோகநாதன், ஸ்ரீரங்கநாதன்(இராஜா பந்தல் சேவை உரிமையாளர்), காலஞ்சென்ற பிறேமநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லலிதாதேவி, கமலாதேவி, பாக்கியநாதன் (கனடா), உதயமலர், திவ்வியமலர் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற பிள்ளையம்மா மற்றும் மகேஸ்வரி, தம்பித்துரை ஆகியோரின் சகோதரியும் உஷானந்தினி, கஜேந்தினி, மயூரன், யசிந்தன், சாரிஸ்சா(கனடா), சரண்ஜா(கனடா), நிர்மலகுமார் (கனடா), சிவகுமார்(கனடா), சிந்துஜா(கனடா), இந்துஜா (கனடா), சர்மிளா, சுவஜெனனி, சுகாஜினி, சங்கர், அகிலா, கேமலன், துஷிதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.12.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளையாட்டு அரங்கு வீதி,*
*கல்வியங்காடு.*

தகவல்:
**கணவர், பிள்ளைகள்** (69293)

### தம்பு துரைராசா



உடுவில் தெற்கு, புதுமடத்தைப் பிறப்பிடமாகவும் பட்டினசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு துரைராசா நேற்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவேந்திரன் (இந்தியா), ஜீவானந்தன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), கஷேந்திரன் (இந்தியா), லோபாமிலன் (2008 உயர்தரம், வர்த்தகப்பிரிவு, மானிப்பாய் இந்துக் கல்லூரி), மேரிபமிலினி (2008 உயர்தரம்,கலைப்பிரிவு, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்ஸ்மின் றொஷானி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பட்டினசபை வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:
**து.ஜீவானந்தன்**
*(மகன் - ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி).*

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை மயில்வாகனம்

(Retd.C.C Maha Oya Estate, Sunny Crost Estate)

ஏழாலை தெற்கு, களபாவோடையை பிறப்பிடமாகவும், அவிசாவளையை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயில்வாகனம் 22.12.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஏழாலையைச் சேர்ந்த அமரர்களான செல்லத்துரை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சுந்தரத்தின் பொறாமகனும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த அமரர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஜனி (ஆசிரியை), முருகதாஸ் (பிரதம இலிகிதர்), மோகனதாஸ் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவமலரின் பாசமிகு மாமனும் மகேந்திரன், யோகராணி, யோகேஸ்வரி (ஜேர்மனி), செல்வராணி, இந்திராணி, இந்திராதேவி (கனடா), இராசகுமாரன் (கனடா), வசந்தகுமாரி (சின்னம்மன்), விஜயகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னபூரணம், சந்திரவதனா, ஞானரஞ்சிதமலர் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (24.12.2007) திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு இந்துராணை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
*இந்துராணை, வகாக்கா, ரூவான்வெல.*
*தொ.பே 0776078578, 0725493436*

## 31ஆம் நாள் நினைவலைகளும் 56 ஆவது பிறந்தநாளும்

எங்களுக்காக 25 12 — எங்களைவிட்டு 16 11



1951 — 2007

### திருமதி குமாரசாமி மகாலட்சுமி

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உடன்வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (24.12.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் எமது அன்பு உள்ளங்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வங்கியடி லேன்,
இணுவில் கிழக்கு, இணுவில். (சி/54791)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-குவைதாவின் அடுத்த இலக்கு பாகிஸ்தான் என்கிறது அமெரிக்கா

வாஷிங்டன்,டிச.24

அல்-குவைதா தீவிரவாதிகள் அடுத்ததாக பாகிஸ்தானைத் தாக்கத் திட்டமிட்டுள்ளனர் என அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் றொபேர்ட் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்துவதற்காக ஏராளமான அல்-குவைதா தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவி வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் றொபேர்ட் மேலும் கூறியவை வருமாறு:-

''ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டு வந்த அல்-குவைதா தீவிரவாதிகள் தற்போது பாகிஸ்தான் அரசு மற்றும் பாகிஸ்தான் மக்களைக் குறிவைத்துள்ளனர். பாகிஸ்தானின் கிழக்கு எல்லை வழியாக ஏராளமான அல்-குவைதாத் தீவிரவாதிகள் ஊடுருவி வருகின்றனர்.'' - என்று தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் சில எல்லைப்புறப் பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை அல்-குவைதாவினர் மீண்டும் நிலைப்படுத்தியுள்ளனரா என்ற கேள்விக்கு அவர் மறுப்புத் தெரிவித்தார்.

''பாகிஸ்தான் இராணுவம் ஸ்வாட் பகுதியில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை சிறப்பாக மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தானின் புதிய இராணுவ தலைமைத் தளபதி பர்வீஸ் கியானி தனது சிறப்பான நடவடிக்கைகளால் அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்துள்ளார். அமெரிக்கா கியானியுடன் இணைந்து செயல்படும். பாகிஸ்தானில் தீவிரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவ அவருடன் பேச்சு நடைபெறும். இதற்காக பாகிஸ்தான் இராணுவத்திற்குப் பயிற்சி மற்றும் ஆயுதங்கள் வழங்கப்படும்.'' - என்றும் றொபேர்ட் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஓராண்டு காலத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகம் நடைபெற்றுள்ளதை ஒப்புக்கொண்ட அவர், அங்கு நேட்டோ மற்றும் அமெரிக்கப் படை அதிகளவு குவிக்கப்பட்டுள்ளதும் அவர்கள் மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகளும்தான் இதற்குக் காரணமென கூறப்படுவதை மறுத்தார்.

## தாய்லாந்தில் பொதுத்தேர்தல்

பாங்கொக், டிசெ.24

இராணுவ ஆட்சியில் இருந்து வரும் தாய்லாந்தில் நேற்று பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

நேற்று இரவு வெளியான முடிவுகளின் படி பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் தக்சின் சின்வட்பிராவின் கட்சி முன்ன்ணியில் உள்ளது.

ஆரம்பிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் மற்றும் கருத்துக் கணிப்புகளின் பிரகாரம் கட்சிக்கு 220 ஆசனங்கள் கிடைக்கும் என தெரிய வந்துள்ளது.

2006ஆம் ஆண்டு செப்டெம்பரில் தக்சின் சின்வட்பிரா, இராணுவ ஆட்சியாளர்களால் பதவி கவிழ்க்கப்பட்டார்.

## ஹமாஸ் அமைப்புடன் யுத்த நிறுத்தம் இல்லை

### இஸ்ரேல் பிரதமர்

மேற்குக்கரை, டிச.24

ஹமாஸ் அமைப்புடன் யுத்தநிறுத்த பேச்சுகளுக்கான சாத்தியக்கூறுகளை இஸ்ரேலியப் பிரதமர் எகுட் ஒல்மேர்ட் நிராகரித்துள்ளார்.

''கடந்த பல மாதங்களாக நடைபெறுகின்ற பயங்கரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடரும். காஸா பள்ளத்தாக்கில் தற்போது இராணுவத்திற்கும், பயங்கரவாத அமைப்பிற்கும் இடையிலான உண்மையானயுத்தம்நடைபெறுகின்றது.'' - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தானில் 37 இலட்சம் போலியான வாக்காளர்கள்

இஸ்லாமாபாத், டிச.24

பாகிஸ்தானில் 37 இலட்சம் போலியான வாக்காளர்கள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் ஜனவரி 9ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்துவருகின்றன. இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து 37 லட்சம் போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, தற்போது 8 கோடியே 10 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்களின் பெயர் அடங்கிய இறுதிப் பட்டியல், இறுவட்டு வடிவில் தயாரிக்கப்பட்டு, அரசியல் கட்சிகளிடம் வழங்கப்பட்டு வருகிறது.

வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் பணி, அடுத்த மாதம் முதல் வாரத்தில் முடிவடைகிறது. தேர்தலை 2 ஆயிரம் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கண்காணிப்பார்கள் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்தோலிக்கராக ரொனி பிளேயர்!

லண்டன், டிச.24



பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர், றோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவராக மாறிவிட்டார். இங்கிலாந்து திருச்சபையின் உறுப்பினராக இருந்த அவர், மனைவியைப் பின்பற்றி கத்தோலிக்கத் திருச்சபையின் உறுப்பினராக மாறிவிட்டார்.

இரண்டுமே கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவைதான் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே, ஞானஸ்தானம் பெற்றுவிட்டார் என்பதால் கத்தோலிக்க திருச்சபையில் சேர எளிய சடங்குகளை மட்டுமே அவர் நிறைவேற்ற நேர்ந்தது. புதிய தேவாலயத்தின் சடங்கு, சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் பற்றியது அவை என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்கர் ஆவதற்காக ரொனி பிளேயர் பாவ மன்னிப்புக் கோர வேண்டும் என்பது சடங்குகளில் ஒன்று. ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையில் சேர்ந்து அங்கு போரிடச் சென்றதைப் பாவமாகக் கூறியிருப்பாரா? பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நடந்த சில சம்பவங்களைக் கூறி அதற்காக பாவ மன்னிப்புப் பெற்றிருப்பாரா? என்று லண்டன் வாசிகள் தங்களுக்குள் கேலியாகச் பேசிக்கொண்டனர் என்று அந்நாட்டுப் பத்திரிகைகள் கிண்டல் செய்துள்ளன.

## செவ்வாய்க் கிரகம் மீது கோள் மோத வாய்ப்பு

லொஸ் ஏஞ்சல்ஸ், டிச.24

செவ்வாய்க் கிரகத்தை நோக்கி வரும் சிறு கோள் ஒன்று அதன் மீது நேருக்கு நேர் மோத வாய்ப்புள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் 30ஆம் திகதி இந்த மோதல் நிகழும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமிக்கு வெகு தொலைவில் உள்ள இந்தச் சிறுகோள் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி வருவதை நாஸா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவ்வாறு கிரகத்தை நெருங்கி வரும் இந்தக் கோள், கிரகத்தின் மீது மோதினாலும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆஸ்திரேலியாவிடம் நஷ்டஈடு கோருகின்றது ஹனீப் குடும்பம்

மும்பை, டிச.24

பயங்கரவாதக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஆஸ்திரேலிய அரசினால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட இந்திய மருத்துவர் முகமட் ஹனீப்பிற்கு அவுஸ்திரேலியா நஷ்டஈடு வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹனீப்பின் நெருங்கிய உறவினர் ஒருவரே இதனைத் தெரிவித்துள்ளார். மருத்துவரின் வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றியமைக்காக நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தவறானவை என நீதிமன்றம் தெரிவித்தால் அதனைத் திருத்திக்கொள்ள வேண்டியது அரசின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் அவரது கௌரவத்தை மீள ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியாவில் அவர் இழந்ததை மீள ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் நஷ்ட ஈட்டை வழங்க வேண்டியதும் அரசின் பொறுப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசே அனைத்தையும் செய்தது. அவரது வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றிய தற்போதைய அரசு என்ன செய்கிறது என்று பார்ப்பதற்காகக் காத்திருக்கிறோம். நஷ்ட ஈட்டிற்காக சட்ட நடவடிக்கை எதனையும் எடுக்கப்போவதில்லையென மருத்துவரின் உறவினர் குறிப்பிட்டுள்ளார்.

ஹனீப் மீண்டும் ஆஸ்திரேலியா செல்வது குறித்துத் தீர்மானிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.




## எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய கப்பல் சீனாவில் மீட்பு!

பீஜிங், டிச.24

சீனாவில் குவாங்டோங் மாகாணத்தில் உள்ள கடல்பகுதியில் 800 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வர்த்தகக் கப்பல் கடலில் மூழ்கிவிட்டது. அதை கடந்த 1987ஆம் ஆண்டில்தான் கண்டுபிடித்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் அந்தக் கப்பலை வெளியே எடுத்தனர்.

அந்தக் கப்பல் 100 அடி நீளத்தில் இருந்தது. 30 மீற்றர் ஆழத்தில் வண்டல் மணலுக்குள் அது புதைந்து கிடந்தது. அதைத் தூக்கி மற்றொரு கப்பலில் வைத்தனர். இந்தக் காட்சி, சீன அரச தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. கப்பலில் தங்கம், வெள்ளியால் செய்யப்பட்ட 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் இருந்தன. இதன்மூலம் பழங்காலத்தில் சீனாவுக்கும், மேலை நாடுகளுக்கும் இடையே கடல் வழிப்பாதை இருந்ததும், அதன்வழியாக வர்த்தகம் நடைபெற்றதும் தெரியவந்துள்ளது. இந்தக் கப்பலை ஒரு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.




## குர்திஷ் போராளிகள் மீது மீளவும் துருக்கி தாக்குதல்

பாக்தாத், டிச.24

ஒருவாரகாலப் பகுதிக்குள் ஈராக்கில் உள்ள குர்திஷ் போராளி நிலைகள் மீது துருக்கி மூன்றாவது தடவையாக விமானத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.




ஈராக்கிலுள்ள குர்திஷ் தொழிலாளர் கட்சி நிலைகளைத் துருக்கி விமானங்கள் தாக்கின. பின்னர் 15 நிமிடங்களுக்கு ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என அந்தநாட்டின் இராணுவம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து மேலதிக தகவல்கள் எதனையும் வழங்காத துருக்கி, காலநிலை மோசமாக உள்ள போதிலும் மலைப்பகுதிகள்மீது தொடர்ந்தும் தாக்குதல் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளது.

வட ஈராக்கின் அமதியா பகுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என தொலைக்காட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த வாரங்களில் நூற்றுக்கணக்கானவர்களை குர்திஷ் போராளிகள் இழந்துள்ளமையால் அவர்கள் வெற்றிபெறுவதற்கான சந்தர்ப்பமில்லையென துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கிலுள்ள குர்திஷ் அமைப்பொன்றின் பேச்சாளர், துருக்கியின் விமானத்தாக்குலுக்கு பொதுமக்களே இலக்கானார்கள் என்று தெரிவித்துள்ளார்.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி 1984 இலிருந்து துருக்கியின் தென்கிழக்குப் பகுதிக்கு சுயாட்சி கோரி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா, துருக்கி உட்பட பல நாடுகள் இந்த அமைப்பைத் தடைசெய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அணு உலையை சர்வதேச நாடுகள் பார்வையிட வடகொரியா சம்மதம்

சியோல், டிச. 24

தனது அணு உலைகளைச் சர்வதேச நாடுகள் பார்வையிட அனுமதிப்பதென வடகொரியா முடிவு செய்துள்ளது. இத்தகவலை அமெரிக்கத் தூதரிடம் வடகொரியா தெரிவித்துள்ளது.

தென்கொரியாவின் உள்துறை உயர் அதிகாரி சங் கிம், மூன்று நாள் பயணமாக வடகொரியா சென்று நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார். வடகொரியாவின் அணுத் திட்டங்களை பிற நாடுகள் பார்வையிட அனுமதிக்குமாறு வடகொரிய அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டாரெனச் செய்தி வெளியாகியுள்ளது. யுரேனியம் செறிவூட்டும் பணியை நிறுத்துமாறு வடகொரியாவை வலியுறுத்தியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அணு ஆயுதத் தயாரிப்பைக் கைவிடுவதென்ற வடகொரியாவின் முடிவைச் செயல்படுத்துவது தொடர்பாக வடகொரிய அதிகாரிகளுடன் கிம் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னரே தனது முடிவை வடகொரியா அறிவித்தது. வடகொரியாவின் கருத்துக் குறித்து சியோலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அணுஆயுத தயாரிப்பைக் கைவிட வடகொரியா கடந்த ஜூலை மாதம் ஒப்புக்கொண்டது. இதன்படி வடகொரியாவின் பியோங்யாங் பகுதியில் உள்ள அணு உலை மூடப்பட்டது. தற்போது அந்த ஆலையை முற்றிலுமாகச் செயலிழக்கச் செய்ய வடகொரியா முன்வந்துள்ளது. இப்பணியை அமெரிக்க நிபுணர்கள் முன்னிலையில் மேற்கொள்ள முன்வந்துள்ளது. இந்த ஆலையில் யுரேனியம் செறிவூட்டப்பட்டு வந்ததால் அணுஆயுதத் தடைச் சட்டத்தில் வடகொரியாவை உட்படுத்திடுவதில் தாமதமானது. 2002ஆம் ஆண்டே இந்த ஆலையில் உடன்பாட்டுக்கு விரோதமாக யுரேனியம் செறிவூட்டுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டர் பூட்டிய மூன்று சில்லு மோட்டார் சைக்கிள் தேவை

வலது குறைந்தவர் பாவித்த மோட்டர் பூட்டிய மூன்று சில்லு வண்டி விற்பனைக்கு இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

வலது குறைந்த ஒருவர் தெருவில் போய் வருவதற்குத் தேவைப்பட்டுகிறது.

தொடர்பு கொள்ள:
**சத்தியசாயி சேவா நிலையம்**
திருநெல்வேலி.
(69278) தொ.பேசி. 9476 - 9- 12 மணி/ 4 - 5 மணி.

## ஒம்பதாம் ஆண்டு நினைவு

தோற்றம் 28 ★ 02 ★ 1927



மறைவு 24 ★ 12 ★ 1998

### அமரர் நாகமுத்து சின்னத்துரை J.P.

(முன்னாள் உடுவில் கி.ச.உப தலைவர்)

ஒன்பது ஆண்டுகள் சென்றதய்யா
மாறவில்லை உம் திருவதனம்
தேடி நித்தம் ஏங்குகிறோம்
காணவில்லை உம் திருவுருவம்
கூடியிருந்து அரவணைத்து இன்று
எம்மை விட்டுச் சென்றதேனோ?

பிரிவால் துயரும்
மருமகள் - பாக்கியநாதன்
... - பவளமலர்
பேரப்பிள்ளைகள் - ..., தீபா, சிந்து, சரண்யா.

ஞானப்பிரகாசர் வீதி.
மல்வம். உடுவில். (69247)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கனகலிங்கம் சுரேஷ் (கண்ணன்)

தாயின்மடியில் 10★05★1979
ஆண்டவன்அடியில் 24★12★2000

*வல்லதவப் பேற்றினாலே வந்துதித்த*
*வடிவழகன் சுரேஷ்கண்ணா எங்கு சென்றாய்?*
*நின்முகத்தைக் காணாமல் கதறுகின்றோம்*
*நின்குரலைக் கேளாமல் பதறுகின்றோம்*
*நல்லவனே உன்முகத்தைக் காணுவோமா?*
*மிளிர்சிரிப்பை மேதினியில் இனிக் காண்போமோ?*
*தொல்லுலகில் திரவியமும் தேடச் சென்றாய்*
*அல்லலுற்றே பனிக்குளிரால் உயிரை நீத்தாய்?*
*உன்பிரிவால் துடிக்கின்றோம் கண்ணீர் சிந்துகின்றோம்*
*எங்கள் குடும்ப விளக்கே நீ எங்கு சென்றாய்?*
*நல்லாத்மா சிவ பதத்தில் பெறுக சாந்தி.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி,இணுவில். (69271) **குடும்பத்தினர்.**

## SUBRA (14) 2010 A/L

**மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு**
உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்
பாடத்தெரிவு எவ்வாறு அமையவேண்டும்.
கல்வியியலாளர்கள் கலந்து வழிகாட்டவுள்ளனர்.
25.12.2007 (நத்தார் தினத்தில்)
மாலை 3.30 - 5.30 வரை
★ 150 மாணவர்கள் மட்டுமே அனுமதி.
★ முற்றிலும் இலவசம். (69276)

## மலிவு விற்பனை

ஒட்டு எலுமிச்சங்கன்றுகள், ஒட்டு விலாட் மாங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. கூடுதலாகக் கன்றுகள் எடுப்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

கையிருப்பு இருக்கும் வரை மட்டுமே.

தொடர்பு:
அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
விவசாய நிறுவனம்,
மருதனார் மடம். (69288)

## மரண அறிவித்தல்

### மழவராயமுதலி கனகம்மா



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மழவராயமுதலி கனகம்மா 20.12.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மழவராயமுதலி அவர்களின் அன்புமனைவியும் முத்துவேலு - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், சாந்தரூபி, சிறிகுமாரி (அமரர்), யோகராணி, புஸ்பராணி, கனகராசமுதலி, கமலராணி, நாகராசமுதலி, லலிதராணி ஆகியோரின் தாயாரும், யோகேந்திரன், சிவபாலன், சற்குணம், ஜெயராஜ், பத்மாவதிதேவி, சிறிகோபால், சுரேஸ்வரி, பார்த்தீபன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
யோகேந்திரன் சாந்தரூபி *(மகள்)*
அருள்செல்வன் *(பேரன்-வன்னி)*
கே.கே.எஸ். வீதி,
தாவடி. (69285)

## SATHEES TRAVEL AGENCY
### உடனடி வேலை வாய்ப்பு

**DUBAI**
பாதுகாவலர், சாரதி

**DOHA QATAR**
காப்பென்ரர், மேசன், ஜெனரல் லேபர்
பிளம்பர், எலக்றிசன், A/C மெக்கானிக்

**SAUDI ARABIA**
பாதுகாவலர் (Security), ஜெனரல் லேபர்
A/C மெக்கானிக்

E-mail:- sathees agency @ hotmail. com
Regd No: VSW/FIN/BR/936/1-2004
T.P: 021 4591625, 0776138942. (69266)

தொடர்பு: K சதிஸ்,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

## மறக்க முடியாத இரண்டாம் ஆண்டின் நினைவலைகள்



அமரர்
### முருகேசு தாமோதரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம் 13★01★1932
மறைவு 16★12★2005

*திதி: அபரபக்கபிரதமை*
*24.12.2007*

ஆண்டிரண்டு போனதப்பா!
உண்மை, அன்பு, நேர்மை, இறைபக்தியுடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டி எம்மை வாழவைத்தீர். எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்களின் உணர்வுகள் எங்களுடன் பயணிக்கின்றன.

*'கோகுலம்',*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (69251) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### *விஜயகாந்தன் ஜெயலட்சுமி (வேவி)*



தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி விஜயகாந்தன் ஜெயலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (22.12.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயகாந்தனின் (R.D.A) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-சிவக்கொழுந்து தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான விசுவர்-செல்லாட்சி தம்பதியினரின் மருமகளும், தாட்சாயினி (ஜேர்மனி), முகுந்தன் (ஜேர்மனி), பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், சுமித்திரன், றூபிலா, ஆனந்தன் ஆகியோரின் மாமியாரும், சிவப்பிரகாசம், பாக்கியலட்சுமி, விஜயலட்சுமி (ஜேர்மனி), அன்னலட்சுமி, சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), சிவலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், துவாரகன், துளசி, மதுமிதா, சாரூஜன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொட்டிலடி,*
*சங்கானை.* (69280)
தகவல்: **குடும்பத்தினர்.**

## அழியாத நினைவுகளில் ஆண்டிரண்டு





காற்பந்தாட்டத் துறையில் விருது பெறும் வீரனாய்



இறை பக்தனாய்



பின்லாந்தில் உலக மெய்வல்லுநர் போட்டியில் முகாமையாளராய்

### அமரர் ஆறுமுகம் சிவசம்பு குணரெத்தினம்

இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர், விளையாட்டுத்துறை
வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு.

மண்ணில் விளையாட 01.11.1938
விண்ணில் விளையாட 16.12.2005

திதி: அபரபக்க பிரதமை - 24.12.2007

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
ஒளிச்சுடராய் திகழ்ந்த எங்கள் குலவிளக்கே!
உம் நினைவுகள் ஈராண்டு சென்றாலும் குறையாது எங்களிடம்
உயிருள்ளவரை என்றென்றும் உங்களை நினைவுகூரும்

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்களது உயிர்வாழும் உரிமையை வலியுறுத்தும் சீலர்கள் யுத்தமே தீர்வெனக் கூறி மக்கள் உயிர்களுக்கு உலை வைப்பதா?

இலங்கையின் அரசியல் நிர்வாகத் தரப்பின் இன்றைய முக்கிய ஆதிபத்திய வாதிகளான ஜாதிக ஹெல உறுமயக் கட்சியைச் சேர்ந்த, சீலமிக்க பௌத்த பாது காவலர்களெனத் தம்மைக் கூறிக்கொள்கிறார்கள் பௌத்த துறவிகள். ஆனால் உயரிய பௌத்த தர்மத்தின் அடிப்படைகள் எவையென்பதையே அறியாது - புரியாது - அல்லது தெளிந்துணர்ந்து கொள்ளும் திறனற்று அரசியலையே குழப்பியடிப்பதுடன் பௌத்த தர்மக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபாடான விதத்தில் செயற்பட்டு வருகின்றனர். இதனைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் அமைகிறது இக் கட்டுரை.

'ராவய' பத்திரிகையில் வெளியாகிய கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

1982ஆம் ஆண்டில் இலங்கையில் 67 லட்சம் வரையான எருதுகள் இருந்ததாக, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளையில் தெரிவித்திருந்தார். அவற்றில் 13 லட்சம் வரையானவை சாதாரண எருதுகள் எனவும், மீதியான 54 லட்சம் வரையானவை எருமைகள் எனவும் அவர் விவரித்திருந்தார். இந்த நாட்டில் எருதுகள் இறைச்சிக்காகக் கொல்லப்படும் வேகம் அதிகரித்து வருகின்றது என்பதைப் பகிரங்கப்படுத்துவதே அவரது அத்தகைய கருத்து வெளிப்பாட்டுக்கான காரணம் எனக் கருத முடிகிறது. இவ்விதம் இந்நாட்டில் மாடுகள் இனம் பெருமளவில் உணவுக்காகக் கொல்லப்பட்டதன் காரணமாக, 2000ஆம் ஆண்டளவில் இந்நாட்டின் எருதுகள் இனம் ஒரு லட்சத்து 14 ஆயிரம் வரை குறைவடைய நேர்ந்தது. இது அத்துரலியே ரத்ன தேரரின் மனதை வாட்டும் ஒருவிடயமாக அமைந்ததாகக் கருதமுடிகிறது.

உண்மையில், அத்துரலியே ரத்ன தேரரின் இத்தகைய கவலைக்குக் காரணம், குறிப்பிட்ட இந்த விடயம், அதாவது இந்நாட்டில் உணவுக்காகப் பெருமளவில் எருதுகள் கொல்லப்படும் விடயம், பொருளாதார வளத்தின் ஓர் அங்கம் எனக் கொண்டு, அது பொருளாதார ரீதியில் நஷ்டத்தை ஏற்படுத்துமொன்று என்ற கோணத்திலான கவலையா? அல்லது மிருகங்களது உயிர்வாழ்தவற்கான உரிமையை வலியுறுத்தும் வகையிலான கவலையா? என்பதை இனம் கண்டுகொள்ள இயலவில்லை.

**காமினி வியங்கொட**

அவர் ஒரு பௌத்த துறவி என்பதால் காருண்யத்தை வலியுறுத்தும் வகையில், தர்மோபதேசம் என்ற அடிப்படையில் அவ்வித கருத்தை வெளிப்படுத்த எண்ணியிருக்கலாம். உண்மையில், அதுதான் அவரது நோக்கமானால், கோழிகள், பன்றிகள், ஆடுகள் மற்றும் கடல்மீன்கள் மற்றும் நன்னீர் வளர்ப்பு மீன்கள் என்ற சகலவகை மீன் இனங்கள் என்பவை குறித்த புள்ளி விபரங்களைக்கூட அவர் எதிர்காலத்தில் தமது பௌத்த போதனைகளில் வெளியிடக்கூடும் என எதிர்பார்க்க இயலும்.

### உயிர்கள் மீதான காருண்யம் பௌத்த மதக் கோட்பாடு

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பத்தியில் மிருகங்கள் மீதான காருண்யம் குறித்து மேற்குலக நாடுகளில் வாழும் மக்களது கருத்து நிலைப்பாடு - மன உணர்வு குறித்து எழுதியிருந்தேன். 1970கள் வரை உலகப் புகழ்பெற்றுத் திகழ்ந்த பிரான்ஸ் நாட்டு நடிகையான பிரிஜ்ஜட் பார்டோ இன்று வயதான மூதாட்டியாகிவிட்டார். மிருகங்களின் பாதுகாப்புக்கென பிரான்ஸில் செயற்பட்டுவரும் பாரிய அமைப்பொன்று பிரிஜ்ஜட் பார்ட்டோவின் தலைமையில் தற்போது செயற்பட்டுவருகின்றது. ஒருசமயம், இந்த அமைப்பு, மிருகங்களை இம்சை செய்தலுக்கு எதிராகப் பிரான்ஸின் தலைநகர் 'பாரிஸ்'ஸின் சகல பகுதிகளிலும் சுவரொட்டிப் போராட்டமொன்றினை ஒழுங்குசெய்து நடத்தியது. அந்த அமைப்பால் பாரிஸ் நகரின் சகல பகுதிகளிலும் பெருமளவில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டிருந்த மிருகங்கள் வரிசையில் குதிரை, சில்மீன், பூனை மற்றும் நாய் என்பவையே குறிப்பிடப்பட்டிருந்தன. ஏனைய மிருக இனங்கள் நினைவுக்கு வராதிருப்பினும்கூட, மேற்குலக கலாசாரத்தில் வாய்க்கு ருசியான இறைச்சியைக் கொண்ட எந்தவொரு மிருகவர்க்கமும் அவரது குறிப்பிடலில் உள்ளடங்கியிருக்கவில்லையென்பது மிக நன்றாகவே ஞாபகத்தில் உள்ளது.

அந்தவகையில், உயிரினங்கள் மீது காருண்யம் காட்டும் பௌத்த கோட்பாடுகள் பிறிஜ்ஜட்பார்ட்டோவுக்கும் சொந்தமானவை அல்ல. எனவே மிருக இனங்களின் உயிர்களுக்கிடையில் அவரால் சில தெரிவுகளை மேற்கொள்ள இயலும், அவர் விரும்பி உண்ணும் கோழி, பன்றி மற்றும் எருதுகள் என்பன அவரது ''ஐயோ பாவம்'' பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு, அதுவே காரணமாகியுள்ளது. ஆனால் அத்துரலிய ரத்ன தேரரால் அவ்வாறு செயற்படுவது சாத்தியமற்றதாகும். அவர் தமது பௌத்த துறவு வாழ்க்கையில் தங்கியிருக்கும் வரையிலும் அவர் பௌத்த மதக் கோட்பாடான அனைத்து உயிர்கள் மீதும் கருணை காட்டல் வேண்டும் என்பதன் அடிப்படையில், எருதுகளின் வாழ்வு போன்றே பன்றிகள், ஆடுகள் மற்றும் கோழிகள் என்ற உயிரினங்கள் மீதும்கூட ஜீவகாருண்யத்துடன் நடந்துகொள்ளவேண்டுமெனப் பௌத்த சமயிகளுக்குப் போதனை செய்தாக வேண்டியது அவசியமாகும்.

### மாடுகள் மீதான அக்கறை மக்கள் மீது இல்லாததேன்?

மாடுகள் இனம் குறித்து காட்டப்படும் அக்கறை - விசேடமான பற்று, பௌத்த மத துறவியான அதுரலியே ரத்ன தேரரிடம் மட்டுமல்லாது, இந்நாட்டின் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோர் மத்தியிலும் பொதுவாகக் காணப்படும் ஒரு உணர்வாகும். இத்தகைய நிலைப்பாடு இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலும் கூட மிக இறுக்கமான விதத்திலான வலியுறுத்தலொன்றாக நிலவி வருகின்றது. மாட்டிறைச்சி உண்ணாத - அதே சமயம் வேறு மிருகவகை இறைச்சியை உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ள தரப்பினரால் இவ்விடயம் தொடர்பாகப் பலதரப்பட்ட வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்தகைய கருத்தின் மூலம் எருதுகள் இனம், மனிதனது நடைமுறை வாழ்க்கையில் அவனுக்கு - குறிப்பாக விவசாயிகள் தரப்புக்கு பெருமளவில் பிரயோசனமளிக்கும் - சேவைகளை வழங்கும் ஒன்றாக எருதுகள் விளங்குபவையாகக் கருதப்பட நேர்வதே அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படக் காரணமாகியுள்ளது. ஆனாலும் மனிதனுக்கு பல்வேறு விதங்களில் பிரயோசனங்களை வழங்கும் உயிரினமொன்றின்மீது மட்டும் ஜீவகாருண்யம் செலுத்துவதென்பது, பிறிஜ்ஜட் பார்ட்டோவின் நியாய தர்மத்தின் பாற்பட்டதேயன்றி பௌத்த தர்மத்துக்கு ஏற்புடையதல்ல என்றே கொள்ளமுடிகிறது.

பௌத்த தர்ம கோட்பாடுகளைப் பின்பற்றி ஒழுகும் சீலம்மிக்க இலங்கையில் பௌர்ணமிப் போயா தினத்தில் இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இறைச்சிக் கடைகள் மூடப்படுகின்றன. அன்றைய தினத்தில் சிறப்பங்காடிகளில்கூட இறைச்சி வகைகள் விற்பனை செய்யப்படுவதில்லை. பொதுவாகவே பௌர்ணமிப் போயா தினங்களில் இறைச்சி வகைகளின் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும், மீன் வகைகளை ஓரளவுக்குப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இறைச்சி வகைகளைக்கொண்டு தயாரிக்கப்படும். ''சொஸேஜஸ்'' வகைகள் மேலதிக இறைச்சி உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது இவ்வாறிருக்க, பல லட்சக் கணக்கான நெத்தலி மீன்களைக் கொன்று, சேர்க்கப்பெறும் நெத்தலிக் கருவாட்டை அன்றைய தினத்தில் விற்பனை செய்யாது, ஒரேயொரு எருது மாட்டை மாத்திரம் கொன்று அந்த இறைச்சியைவிற்பனை செய்ய அனுமதிப்



பதால் கொலைப் பாவத்தில் கணிசமான அளவு குறையமாட்டாதா என்றொரு வினாவை இங்கு எழுப்பவேண்டியுள்ளது. இதனிடையே மீனினங்கள் இறைச்சி வகையில் உள்ளடங்கமாட்டா என்ற பொதுவான கருத்து எந்தவித தர்க்க வாதத்தன் ஊடாக இந்நாட்டு மக்களால் ஏற்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்வது சிரமத்துக்குரிய தொன்றே.

### பௌத்த கலாசாரத்தைப் புலப்படுத்தும் வழிமுறைகள்

எது எவ்வாறான போதிலும், இலங்கையில் போற்றத்தக்க பௌத்த கலாசாரம் நிலவுகிறது என்பதைப் புலப்படுத்தும் நோக்கில் இந்நாட்டின் தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் ஒலி - ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகளில் வரும் புகைப்பிடித்தல் மற்றும் மது வருந்துதல் சம்பந்தப்படும் காட்சிகள் தணிக்கைக்கு உள்ளாகின்றன. அத்தோடு அவை னப் போத்தல்களை விளம்பரப்படுத்தும் மற்றும் அவை இடம்பெறும் காட்சிகளும் கூட வெட்டப்படுகின்றன. அவ்வாறிருக்கையில், மதுபோதை தலைக்கேறி தள்ளாடியவாறு வீடு செல்லும் கணவரொருவர், வீட்டை அடைந்ததும் தனது மனைவியை அடித்து நொறுக்கும் காட்சி அல்லது ஒருவர் கொலை செய்யப்படும் காட்சியைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காட்டுவது எந்தளவுக்குக் கலையம்சம் பொருந்தியது? என்பது கேள்விக்குரியதாகிறது.

நியூஸிலாந்தின் மொத்த ஜனத்தொகை 42 லட்சங்களாகும் எனவும் அந்நாட்டில் பராமரிக்கப்படும் மாடுகளின் எண்ணிக்கை அதை விட இரு மடங்காகும் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விதம்



அதுரலியே ரத்ன தேரர்

பொது மக்களைவிட இருமடங்கு மாடுகள் பராமரிக்கப்படும் அந்த நாடு இலங்கையைவிட எந்த அளவுக்குப் பெரும்முன்னேற்றம் கண்டுள்ளதே என ஒரு கணம் எண்ணத் தோன்றுகிறது. ஆஸ்திரேலிய போன்ற நாடுகளில் சுற்றுப்புறச் சூழல் பராமரிப்புக்கு முன்னுரிமை வழங்கும் அரசியல் கட்சிகள் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றுவதில் ஈட்டும் இலகு வாய்ப்புக்குறித்தும் அத்துரலியே ரத்ன தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். அவரால் சுட்டிக் காட்டப்பட்ட குறிப்பிட்ட அத்தகவல் முற்றிலும் உண்மையானதே. அது அந்த நாடுகளின் பல்துறை வளர்ச்சிக்கு மேலுமொரு படி உதவுவதொன்றாகவே அமைவதைத் தெளிவு

## பௌத்த கோட்பாடுகளை மட்டுமல்லாது அரசியலையும் குழப்பியடிக்கும் பௌத்த தர்மத்தின் அடிப்படையைத் தெரிந்துகொள்ளும் திறனற்ற தரப்பினர்

படுத்திக் கொள்ளமுடிகிறது.

ஐரோப்பிய கண்டத்தின் பெருமளவிலான நாடுகளில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்குக் கைகொடுக்கும் அரசியல் கட்சிகள் இன்று அந்தந்த நாடுகளின் நாடாளுமன்றங்களில் அசைக்க இயலாத பலம்பெற்றுத் திகழ்கின்றன. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கூட சுற்றுச் சூழல் பாதுகாப்பை முன்னிலைப் படுத்தும் அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இத்தகைய ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்கள் மனிதவாழ்க்கையைப் பாதுகாப்பதற்கான சகலவித செயற்பாடுகளும் சட்டரீதியாகவும், சமுதாயரீதியாகவும் கடைப்பிடிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டிருக்கும் நிலையிலேயே, அதற்கடுத்த தரத்தில் வைத்துச் சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்தப்படுகிறது என்பது குறித்து நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

ஆனால், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்ற விடயம் இலங்கை அரசின் நிர்வாக அட்ட வணையில் 1970 தசாப்த காலத்திலேயே உள்ளடக்கப்பட்டதை நாம் மறந்துவிட இயலாது.

### பயங்கரவாதியான அங்குலிமாலாவுக்கு தர்ம உபதேசம் செய்யவில்லையா?

இன்று அத்துரலியே ரத்ன தேரர் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இவ்விடயம் தொடர்பான நிலைப்பாடு என்ன? இந்நாட்டில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது. உண்மையில் இன்று இந்நாட்டில் நிலவுவது பயங்கரவாதமே. அதனை வென்றெடுப்பதற்கான ஒரே தீர்வு வழி யுத்தமொன்றே ஆகும் என்பதே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் வழமையான நிலைப்பாடாகும். அத்தரப்பினரின் வாதத்தின்படி, 'அங்குலிமாலா' என்ற வரலாற்றுப் பாத்திரம் ஒரு பயங்கரவாதியே. ஆயினும் புத்தபகவான் அந்தப் பயங்கரவாதிக்கும்கூட தர்மோபதேசம் புரிந்து 'அங்குலிமாலா'வை நல்வழிப் படுத்தியதாக பௌத்த வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன.

இந்நாட்டில் மாடுகள் இனத்தை அழியாது பாதுகாப்பதற்கு அக்கறை காட்டுவதற்கு மேலாக, முதலில் பொதுமக்களை நியாயமற்ற உயிரிழப்புக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு - பாதுகாப்பதற்கு அக்கறை காட்டிச் செயற்பட வேண்டியது மதத் துறவிகள் தரப்பேயாகும். நாட்டின் ஜனாதிபதியும் அவரது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் யுத்தத்துக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படும் நிலையில், நாட்டின் அரசியல் நிர்வாகத்துடன் சம்பந்தப்படும் பௌத்த துறவிகள் என்ற வகையில், அழிவு தரும் யுத்தத்தை முன்னிலைப்படுத்திச்செயற்படும் போக்கைத் தடுத்து நிறுத்தி, - நலிவுறச்செய்து -பலமிழக்க வைத்து நாட்டின் மனித உயிரிழப்புக்களைத் தவிர்த்துச் சமாதான வழியிலான தீர்வைத் தேட வழிதேடுவது பௌத்த துறவிகளது முக்கிய கடப்பாடாகக் கொள்ளத் தக்கதாகும்.

ஆயினும் இக்கூற்று, பௌத்த போதனைகளின் அடிப்படையில் இந்நாடு நிர்வகிக்கப் படவேண்டுமென அர்த்தப்படுத்தப்படுவதாகாது. ஆயினும் மனித உயிர்கள் காவுகொள்ளப் படக் காரணமாகும் யுத்தத்துக்குச் செங்கம்பளம் விரித்து வரவேற்பதோ, ஆதரிப்பதோ பௌத்த துறவியொருவருக்கு நாகரிக மற்றது - ஒவ்வாதது என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட வேண்டியுள்ளது.

### உயிர்களின் பெறுமதியிலும் இன வேறுபாடு உள்ளதா?

அண்மையில் கொழும்பு நுகேகொட சந்தியில் இடம்பெற்ற பார்சல் குண்டு வெடிப்பொன்றில் 19 அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தது. அவர்களில் பாடசாலை மாணவியொருவரும் அடங்குகிறார். அது விடுதலைப் புலிகள் அமைப்பின் மற்றுமொரு தாக்குதல் உத்தியெனச் சந்தேகக்கப்படுகிறது. குறிப்பிட்ட சம்பவம் இடம்பெறுவதற்கு மூன்று நாட்களின் முன்னர் கிளிநொச்சி நகருக்கு அப்பாலுள்ள பிரதேசமொன்றில் பஸ் வண்டியொன்றில் பயணித்த 11 அப்பாவித் தமிழ் மாணவியர், அப்பஸ்வண்டியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலால் உயிரிழந்தனர். குறிப்பிட்ட அச்சம்பவம் அரசினாலோ, அல்லது அரசின் அனுசரணையுடன் இயங்கும் ஆயுதக் குழுவொன்றினாலோ மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என விடுதலைப் புலிகள் அமைப்புக் குற்றம் சாட்டியிருந்தது.

நுகேகொட குண்டு வெடிப்பில் பலியான பாடசாலை மாணவியின் உயிர், மற்றும் கிளிநொச்சிக் குண்டு வெடிப்பில் பலியான பாடசாலை மாணவிகளது உயிர்களின் பெறுமதி என்பவற்றுக்கிடையே ஏதாவது வேறுபாடு உள்ளதா? நுகேகொட சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காகக் கவலை வெளிப்படுத்தும் நாம், கிளிநொச்சி சம்பவத்துக்கும் கூடக் கவலை வெளிப்படுத்த எப்போது கற்றுக்கொள்ளப் போகிறோம்? இன்றைய ஈராக்கில் இது போன்ற குண்டுத் தாக்குதல்களில் தினமும் ஈராக்கிய பொதுமக்கள் உயிரிழந்து வருவது குறித்து நாம் கேள்விப்படுகிறோம். அத்தகைய சம்பவங்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீது விரல் நீட்டிக் குற்றம் சாட்டுகிறோமேயொழிய, நாம் அத்தகைய தாக்குதல்களை மேற்கொள்ளும் தற்கொலைக் குண்டுதாரிகள் மீது குற்றம்சாட்டுவதில்லை. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுப்பதாக உலகுக்குக் காட்டிவரும் ஜோர்ஜ் புஷ், இன்று அவரது தரப்புகள் மத்தியிலேயே பெறுமதி இழந்துவரும் விதம் குறித்து எம்மால் தெளிவாக உணர முடிகிறது.

### தலைசிறந்த சீலமென்பது மக்கள் மீது அன்பு செலுத்துவதே

ஜேர்மனிய சர்வாதிகரி அடேல்ப் ஹிட்லர், மிருக இனங்கள் மீது பெரிதும் ஜீவகாருண்யம் காட்டியதொரு அரச தலைவராவார். அவர் தமது வாழ்நாளில் மாமிச உணவருந்தாது வாழ்ந்தமை அவரது ஜீவகாருண்ய உணர்வைப் புரிந்துகொள்வதற்குப் பொருத்தமான உதாரணமாய் அமைந்திருந்தது. இவ்விதம் மிருக இனங்கள் மீது பெரிதும் ஜீவகாருண்யம் காட்டிவந்த ஹிட்லர், ஐந்து ஆண்டுகள் காலம் என்ற குறிப்பிட்டதொரு கால இடைவெளியில் மாத்திரம் 60 லட்சம் வரையான யூத இனத்துப் பொதுமக்களைப் படுகொலை செய்வித்தார்.

**தமிழில் : ராஜா**

ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரான்ஸின் பிரபல நடிகையான 'பிரிஜ்ஜட் பார்ட்டோ' இன்று பிரான்சின் கடும்போக்கு, வலதுசாரி தேசிய முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளராகச் செயற்பட்டு வருகின்றார். இரண்டாம் உலகயுத்தத்தில் ஜேர்மனியில் வாழ்ந்த யூத இனத்தவர்கள் 60 லட்சம் பேர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு வதைக்கப்பட்டதாகவும், நச்சுவாயு அறைகளுள் தள்ளிப் படுகொலை செய்யப்பட்டதாகவும் வரலாற்றில் பதிவான தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என அக்கட்சியினர் தற்போது தெரிவித்து வருகின்றனர். ஆனால், அந்த முன்னாள் பிரபல நடிகையோ எப்போதுமே மிருக இனங்கள் மீது கடும் அன்பு செலுத்திவருவதாக பிரபல்யப்படுத்தப்படுகின்றது. பிராணிகள் மற்றும் மிருகங்கள் மீது அன்புசெலுத்துவது பாராட்டப்படத்தக்க - வரவேற்கத்தக்கதொரு செயற்பாடே. ஆனால் மனிதர்கள் மீது அன்பு செலுத்துவது அதைவிட சிறந்ததாகக் கொள்ளத்தக்கதாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைவங்கி- நெல்லியடி
# 25 வருட மகத்தான சேவையின் நிறைவில் இன்று
# நாடளாவிய கணனி வலைப்பின்னலில் இணைந்து கொள்ளும்
# ஆரம்ப விழா- 24.12.2007




### ஆசிச் செய்தி

இலங்கைவங்கி நெல்லியடி- 24.12.2007 இன்று நாடளாவிய இலங்கை வங்கியின் கணனி வலைப்பின்னல் வங்கிச் சேவையுடன் இணைந்து கொள்ளும் இந்நன்நாளில் எங்களது உளங் கனிந்த நல்வாழ்த்துகள்.

நவீன உலகின் விஞ்ஞான வளர்ச்சியினால் பலர் பெரிதும் பயன் பெறுவார்கள். இவ்வங்கியின் முகாமையாளருக்கும் இவருடன் இணைந்து செயற்பட்ட அனைவருக்கும் தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் அருள் என்றும் கிட்டுவதாக.

அன்னையின் அடியான்
**சுவாமி சித்ரூபானந்தா.**
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.






### ஆசிச் செய்தி

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு"

மக்கள் சேவையில் இருபத்தைந்து வருட பூர்த்தியில் பூரிக்கும் இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளையினரை மனமார வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம் ஒரு நிறுவனம் என்பது வெறும்கட்டடங்களும், இயந்திரங்களும் மட்டுமல்ல; மேலாக நற்பணியாளரின் குழுமம். பணியாளரின் மனநிலையும், அர்ப்பணிப்புமே நிறுவனத்தின் வளர்ச்சி, மக்கள் சேவையில் ஆழப்படுத்தல் எனும் உண்மையான வளர்ச்சி. இத்தகைய வளர்ச்சியில் அதிலும் இன்றைய தேசத்தின் பொருளாதார இக்கட்டின் மத்தியில் முக்கிய பங்கினை இவ்வங்கியமைப்பு நிறைவேற்ற இறைவனை இறைஞ்சி ஆசித்து நிற்கின்றோம்.

அன்புடன்
**சுவாமி சி.ஆனந்தக்குமார்.**
பங்குத்தந்தை, கரவெட்டி.



### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

விரைவான உலக மாற்றத்திற்கு ஏற்ப மக்களின் தேவைகளும் அதிகரித்துச் செல்கின்றது. மக்களிற்கு சேவையினை வழங்குகின்ற நிறுவனங்களும் கால ஓட்டத்திற்கு ஏற்ப தம்மை நவீனப்படுத்தி வினைத்திறனும், வினைத்திறனும் உடைய வாடிக்கையாளரை திருப்திப்படுத்தக் கூடிய சேவையினை வழங்குதல் அவசியமாகின்றது. இலங்கை வங்கியின் நெல்லியடி கிளையானது கணனி வலைப்பின்னலுடன் இணைவதன் மூலம் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்கின்றது. இதன் மூலம் இப்பிரதேச மக்களிற்கு நிறைவான சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் முகாமையாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதுடன் மக்கள் சகல நன்மைகளையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் பேரருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
பிரதேச செயலாளர், வடமராட்சி தெற்கு, மேற்கு,
கரவெட்டி.

### வங்கிச்சேவை மேம்பாட்டில் ஒரு மைல்கல்



இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை நாடளாவிய கணனி வலைப் பின்னல் சேவையில் இணைந்து கொள்வதையிட்டு இப்பிதேச மக்களும், வாடிக்கையாளர்களும் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றனர். வங்கிச் சேவையின் வளர்ச்சியில் இது ஒரு மைல் கல்லாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் துரிதமாகவும், இலகுவாகவும் வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள உதவும். மாறிவரும் நவீன உலகின் தேவைக்கேற்ப வங்கிச் சேவைகளிலும் வளர்ச்சி அவசியமானது. நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் நாடளாவிய கணனி வலைப்பின்னல் வங்கிச் சேவையில் நெல்லியடிக் கிளை இணைந்து கொள்வது இப்பிரதேச மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

வங்கிச் சேவையில் ஏற்படும் இந்த மேம்பாடு இப்பிரதேச மக்களின் வாழ்வியலிலும் மேம்பாட்டை ஏற்படுத்த வழிவகுக்கும். மக்கள் சேவையில் இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை மென்மேலும் வளர எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச்செய்தி

வடமராட்சியின் பிரதான வர்த்தக, பொருளாதார மையமான நெல்லியடிப் பிரதேசத்தில் சிறப்பாக மக்கள் சேவையாற்றிவரும் வங்கிகளிலொன்றான இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு உலகத்தரத்திலான இலகுவழிச் சேவைகளை வழங்குவதற்காக இன்று முதல் உயர் வலையமைப்பில் தன்னை இணைத்துக்கொள்வது மகிழ்ச்சியளிக்கின்றது. இப்பிரதேசத்தில் தனக்கேயுரிய சிறப்பான சேவையினூடாக மக்கள் மனதில் இடம்பிடித்துள்ள இவ்வங்கி முதல்வரும், பணியாளர்களும், பாடசாலை மாணவர்களிடம் வங்கி நடைமுறைகளை அறிமுகஞ்செய்வதிலும் அவர்களது சேமிப்புப் பழக்கங் களை ஊக்கிவிப்பதிலும் கல்விக்கான உதவிகளை வழங்குவதிலும் முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகின்றனர். மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே வங்கிப் பணிகளில் அவர்களைப் பயிற்றுவித்தும் வங்கி நடைமுறைகளில் அவர்களை ஈடுபடுத்தியும் தனது எதிர்காலப் பணியாளர்களையும் வாடிக்கையாளர்களையும் உருவாக்கி வருகின்றனர். கல்விச் சமூகத்துடன் ஆரோக்கியமான உறவினைப் பேணிவரும் இவ்வங்கியானது சமூகச்சீர் நலிவுற்றுக் குறைபட்டுள்ள இன்றைய சூழலிலும் உலகளாவிய வலையமைப்பில் தனது சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் காலம், இடம் சார்ந்த கட்டுப்பாடுகளைக் கடந்து மக்களுக்குச் சேவையாற்றும் வசதிகளுடன் அதன் செயற்பாடுகள் செழித்தோங்க வாழ்த்துகின்றேன்.

**திரு.செல்லத்துரை சேதுராஜா,**
அதிபர்,
யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.



### வாழ்த்துச்செய்தி

வடமராட்சியில் அமைந்துள்ள இரண்டாவது இலங்கை வங்கியின் சேவைகள் இன்று நடளாவிய ரீதியில் கணனி வலைப்பின்னலுடன் இணைக்கப்படுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. பூரண கணனி வலைப்பின்னலுடன் இணையும் இலங்கை வங்கியின் 296 ஆவது கிளையாக இது திகழ்கிறது. இலங்கை வங்கி என்ற ஆலவிருட்சத்தின் 305 இற்கும் மேற்பட்ட கிளைகளில் இன்று 296 கிளைகள் கணனி மயப்படுத்தப்பட்டுவிட்டன. இங்கே கணக்கு வைத்திருக்கும் ஒருவர் மற்றைய 295 கிளைகளிலும் தனது வங்கிச் செயற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

நான் சேவையிலிருந்த காலத்திலேயே இந்தக் கணனி மயமாக்கலுக்கான திட்டம் ஆரம்பமாகியபோதும், பலவிதமான புறச்சூழ்நிலைகளாலும் தடங்கல்களாலும் அது விரைவில் நிறைவேறாமல் இன்றுதான் இனிதே அரங்கேறியிருக்கின்றது.

நெல்லியடிக்கிளை சிறந்த கட்டுப்பாடான வாடிக்கையாளரைக் கொண்டது. அதனுடைய துரித வளர்ச்சி காரணமாக இக்கிளை ஓரிரண்டு வருடங்களுக்கு முன் 'A' தரத்துக்குத் தரமுயர்த்தப்பட்டது. தற்போது நவீன கணனிச் சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வசதியிருப்பதால் வாடிக்கையாளர் வட்டம் பெருக்கிக்கொண்டே போகும். ஆகவே விரைவில் வடமராட்சியின் முதல் மேற்தரக் கிளையாக இது தரமுயருமென்ற நம்பிக்கையோடு இறைவனை வேண்டி எனது நல்லாசிகளையும் இந்த முக்கிய தினத்தில் நல்குகின்றேன்.

**க.பாலசுப்பிரமணியம்,**
முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர் (வடபிராந்தியம்), இலங்கைவங்கி.



### வங்கியின் முதலாவது முகாமையாளர் திரு S.விக்கினராஜாவின் ஆசிச் செய்தி
### இலங்கைவங்கி நெல்லியடிக்கிளை கணனிமயமாகுதல்

இலங்கைவங்கி நெல்லியடிக்கிளை கணனிமயமாகும் இவ்வேளையில் இக்கிளையின் முதல் முகாமையாளர் என்ற முறையில் எனது நல்லாசிகளை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இக்கிளை ஒரு C தர சிறிய கிளையாக திறந்து வைக்கப்பட்டது. ஆனால் ஒரு குறுகிய காலத்தில் இக்கிளை பாரிய வளர்ச்சியை அடைந்தது. அதற்குக் காரணம் நெல்லியடிமக்களின் ஒத்துழைப்பு. நெல்லியடி ஒரு சிறிய நகரமாக இருந்தாலும் மக்கள் மிகவும் சுறுசுறுப்பும், கடின உழைப்பாளிகளாகவும் சேமிப்பில் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் இருந்தனர். ஆகவே இக் கிளை அதிவேகமாக வளர்ச்சி அடைந்து இன்று கணனி மயமாக்கப்பட்டு ஏனைய கிளைகளுடைய வலைப்பின்னலுடன் இணைக்கப்படுவது எனக்கு ஒரு மனநிறைவைத் தருகிறது.

எனது அருமை நண்பன் தில்லைநாதன் அவர்களின் முகாமைத்துவத்தில் இந் நிகழ்வு நடைபெறுவதையிட்டு மேலும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் நிச்சயமாக இக்கிளையை மேன்மைப்படுத்துவார் என்பதில் எனக்கு ஐயப்பாடு இல்லை. ஆகவே இது சம்பந்தமாக நெல்லியடி வாடிக்கையாளர்களுக்கும், கிளை ஊழியர்களுக்கும் தில்லைநாதன் அவர்களுக்கும் எனது வாழ்த்துகளும், ஆசிகளும் உரித்தாகுக.

சி.விக்னராஜா, ஓய்வுபெற்ற முதலாவது நெல்லியடிக்கிளை முகாமையாளர்.




## விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

நெல்லைசில்க்
பிரதான வீதி,
நெல்லியடி.

செல்லமுத்துஸ்
புடைவையகம்,
பிரதான வீதி, நெல்லியடி.

தங்கம்சன்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

திருநடன முருகன்
மெடிகல்ஸ்,
நெல்லியடி.

சிதம்பரப்பிள்ளை
புத்தகசாலை,
நெல்லியடி.

சதா
பொன்ஸ்
அல்வாய்.

விண்மீன்
அங்காடி
நெல்லியடி.

ENSR
கடைச்சல் பட்டறை
நெல்லியடி.

ஐங்கரன்
றெக்கிறியேசன் கிளப்,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

MATHS
CENTRE
நெல்லியடி.

வைஷ்ணவி
நகைப்பூங்கா,
நெல்லியடி.

திசா
களஞ்சியம்
நெல்லியடி.

அருண்
அழகுமாடம்
நெல்லியடி.

ஜெயசெந்தினி
நகைமாடம்
நெல்லியடி.

கலைவாணி
கண்ணாடிக் களஞ்சியம்,
கலைவாணி புடைவையகம்,
நெல்லியடி.

புதிய அம்பிகா
தொலைத் தொடர்பு
நிலையம்,
நெல்லியடி.

விநாயகர்
களஞ்சியம்,
நெல்லியடி.

முத்துமாரி ஸ்ரோஸ்
(பெரியதம்பி),
அல்வாய்.

கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்,
கரவெட்டி.

யமுனா
ஸ்ரோஸ்
நெல்லியடி.

ஜனனி
நகைமாடம்
நெல்லியடி.

நியூ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்
நெல்லியடி.

[illegible]
MMV றோட், நெல்லியடி.

[illegible] ஸ்ரோஸ்
நெல்லியடி.

சென்றல் சேவிஸ் ஸ்ரேசன்,
நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசின் முழு நோக்கமும் மூலோபாயமும்

சமாதானத்தை அடைவதற்கு இராணுவத் தந்திரோபாயங்கள் நாடப்படுவது குறித்து, இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை கவலை தெரிவித்திருக்கிறது.

நாளைய நத்தார் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே ஆயர்கள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

- மனித மாண்புகளும் சம உரிமைகளும் நிச்சயமாக்கப்படாத வரையில் - சமய, இன, மொழி ரீதியில் பாரபட்சங்கள் காட்டப்படுகின்ற வரை - நாட்டில் ஒற்றுமை, சாந்தி, சமாதானம் போன்றவற்றை எட்டவே முடியாது.

- சமாதானத்தை அடைவதற்கு, இப்போது நடைபெறும் ஆக்ரோஷமான சண்டைக்குரிய காரணங்கள் முதலில் களையப்படவேண்டும்.

- ஆனால் கடந்த நான்கு தசாப்தங்களாக இந்த நாட்டு அரசியல் தலைவர்கள் அதற்காக எடுத்த முயற்சிகள் - அரசியல் தீர்வைக் கண்டுபிடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் - எதுவும் நேர்மையானவையாக உண்மையானவையாக இருக்கவில்லை.

இவ்வாறு ஆயர் பேரவை பல யதார்த்தங்களையும் முந்திய அனுபவங்களையும் எடுத்து விளம்பியுள்ளது.

பேச்சுவார்தையின் மூலம் மட்டுமே, அனைத்துத் துறைகளிலும், அனைத்து மக்களுடைய எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தியாக்கக் கூடிய தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

யதார்த்தங்களும் உண்மைகளும் ஓரங்கட்டப்பட்டு ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் - தெற்கில் ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் - ஏனையோரின் உரிமைகளை தூசாகக் கருதி தமது எதேச்சதிகாரத்தை - இனத்திமிரை - மேலாண்மைக் கொடூரத்தை - கட்டவிழ்த்து விடுவதே கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு உண்மையான விரும்பமும், தூர நோக்கும் இருந்திருப்பின், இத்தனை காலத்துக்கு தீர்வு எதுவுமின்றி இனப்பிரச்சினை இழுபட்டிருக்கமாட்டாது.

தம்மிடம் இனரீதியான பெரும்பான்மைப் பலம் இருக்கிறது; சிறுபான்மையினரான தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்காது அடக்குமுறை வாளைக் கொண்டு அவர்களை வெட்டி வீழ்த்தி, தாம் மேலோங்கி நின்று கோலோச்சவேண்டும் என்ற அட்டூழியச் சித்தாந்தமே இனப்பிரச்சினை இத்தனை ஆண்டுகளாக நீடித்து, நாட்டில் பேரழிவுகளை உண்டாக்கியமைக்கு மூலகாரணம்.

நாட்டைப் படுபாதாளத்தில் தள்ளி, பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைக் கூட தமிழர்களுக்கு வழங்க மறுத்து இன விவகாரத்தை நாளுக்கு நாள் மேலும் சிக்கலாக்கியதற்கு தெற்கின் சிங்கள அரசியல் தலைவர்களே முழுக்க முழுக்கக் காரணமும் பொறுப்பும். தமிழர்கள் மீது எவரும் சுட்டுவிரலை நீட்ட முடியாது.

தமிழ்மக்கள் உரிமைகளில் பத்துப் பதினைந்து வீதத்தை வழங்குவதற்கு இரண்டொரு தடைவைகள் ஒருசாரார், தவிர்க்க முடியாமல் முன்வந்த வேளைகளில், அடுத்த தரப்பினர் 'குத்தி மறித்த' தந்திரம் தெரிந்ததே.

அவை கூட, நான் கொடுப்பது போலக் கொடுகிறேன் நீ தட்டிக்கொட்டிவிடு என்ற ஏற்பாடுகளுடனேயே அவ்வப்போது அரங்கேறின. ஆட்சி அதிகாரப் போட்டியில் இரண்டு கன்னைகளாகப் பிரிந்து நின்றாலும், தமிழர்களை குழிக்குள் வீழ்த்துவதில் - அவர்களை அடக்கி ஆள்வதில் - இரண்டு தரப்பினருமே ஒன்றுதான் என்று எடுத்துக்காட்டிய அரசியல் நிகழ்வுகள் பலப் பல.

சிங்கள அரசியல் தலைமைகள் தமக்குரிய அரசியல் உரிமைகளை வழங்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய சிறுபுள்ளி அளவு அறிகுறி தானும் இப்போதைய ஆட்சியில் தமிழர்களுக்குத் தென்படவில்லை. சிங்கள இனவாதத் திமிரும் அடக்குமுறை ஆணவமுமே அரசின் ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் விரவிக் காணப்படுகின்றன.

அரசியல் தீர்வு என்பது தமிழர்களுக்குக் கிள்ளிப் போடப்படும் பிச்சையாக இருக்கவேண்டும் என்ற மமதைப் போக்கையே அரசு கட்டவிழ்த்துள்ளது. அரசியல் தீர்வு என்ற அற்ப சொற்பமான சலுகைகளை இராணுவத் தீர்வின் மூலம் திணிப்பதே மஹிந்த அரசின் முழு நோக்கம் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ளலாம். அரசின் அன்றாட நடத்தைகளும் செயற்பாடுகளும் அதனையே தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

அதிகுறைந்தபட்ச உரிமைகளைக் கூடக் கணக்கில் எடுப்பதற்கு அது தயாரில்லை. ஆனாலும் சமாதானம், தீர்வு என்ற சொற்களை வெளிப்பகட்டாக உச்சரித்துக்கொண்டு, செயலளவில் இராணுவத் தீர்வுக்கான சகல கருமங்களையும் வெகு வேகமாக முன்னெடுத்து வருகிறது.

இதனை நன்றாக மணந்து பிடித்தவர்களாக கத்தோலிக்க ஆயர் மன்றத்தினர் தமது கவலையை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், இராணுவத்தளபதி, இராணுவ உயர் அதிகாரிகள் என்று எல்லோரது வாய்களும் விடுதலைப் புலிகளை அழிப்பது குறித்தும் வடக்கைக் கைப்பற்றுவது குறித்துமே சூளுரைகளும் பிரகடனங்களும் உதிர்க்கின்றன. மனதில் இருப்பதுதான் வாயில் வரும். எனவே அரசாங்கம் முழுக்க முழுக்க இராணுவத் தீர்வையே நாடி ஓடிச் செற்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆனால், ஆசாடபூதிச் சாமிகள் போல அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதில் தனக்கு விருப்பம் இருப்பதாக வேடம் போட்டுக்கொள்கிறது. இந்தியா, அமெரிக்கா உட்பட்ட வெளிநாடுகள் நம்பக் கூடிய முறையில் அது நாடகம் ஆடுகிறது.

தமிழர்களுக்கு உரிய, அவர்களுக்குச் சேரவேண்டிய, அவர்களது பிரிக்க முடியாத உரிமைகளை உள்ளடக்கிய தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் எண்ணம் அரசுக்குக் கிஞ்சித்தும் இல்லை. இராணுவத் தீர்வைச் செயலாக்கி, தமிழர்களைப் பலவீனப்படுத்தி, தனது மேலாண்மையை ஓச்சி சில்லறை உரிமைகளைக் கிள்ளித் தெளிக்கும் மூலோபாயத்தின் நெறிப்படுத்தலிலேயே அரசாங்கம் திட்ட மிட்டுச் செயற்படுகிறது.

இதனைத் தெரிந்தும் தெரியாதவர்களாக, புரிந்தும் புரியாதவர்களாக சர்வதேசங்களும் பொம்மலாட்டம் நடத்தி வருகின்றன.

பூரணமானதோர் சுயாட்சியை தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் உறுதிப்படுத்தும் - ஒரு தீர்வைக் கொண்டு வருமாறு இலங்கை அரசிடம் வற்புறுத்தும் திராணியற்றனவாக சர்வதேச நாடுகளும் தங்களின் நலன்களை மட்டுமே முன்னிறுத்தி இலங்கை அர சுக்கு ஒத்து ஊதுகின்றன. அவ்வளவே!

# அரசியல் தலைவர்கள் சுயநலத்தை கைவிட்டு சமாதானத்தை நிலைநாட்ட உழைக்க வேண்டும்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நத்தார் செய்தி

### நத்தாரை ஆடம்பரங்களுடன் கொண்டாடக்கூடிய காலம் அல்ல இது; பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழும் சிறுவர்களுக்கு உதவுங்கள்

எமது எதிர்கால சந்ததியினருக்கு வன்செயலும் கொலைகளும் நிறைந்த கலாசாரத்தையும் ஒற்றுமையின்மையையும் விட்டுச் செல்வது மிகப் பாரதூரமான அநீதியாகும் என்பதை நாம் உணர்கின்றோம். சுயநலத்தைத் துறந்து சமாதானத்தைப் பெற அரசியல் தலைவர்களை உழைக்கும்படி கடவுளின் பெயரால் கேட்டுக்கொள்கின்றோம்.

நத்தார் விழாவை ஒட்டி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு-

சமாதானத்தின் மன்னராகிய இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

நாம் தேடும் சமாதானம் எம்முடன் தங்கும் என்னும் எதிர்பார்ப்புடன் மீண்டும் ஒருமுறை கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம். இன்று இலங்கை மக்களின் சோதனை, வேதனை, நிம்மதியற்ற நிலைகளுக்கு மத்தியில் சமாதானத்தை அக்கறையுடன் தேடுவதே மிகப் பிரதானமாக உள்ளது. ஆயினும் எமது நாட்டில் அமைதி இன்னும் கனவாக உள்ளது என்பது உண்மையாகின்றது. வானதூதர் கிறிஸ்து பிறப்பில் வாழ்த்துரைத்தது போல், உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதி உரித்தாகுக என்பதனை நாம் கேட்கவே முடிகிறது. இன்று நாம் அனைவரும் சமாதானத்துக்குரிய தேவையை ஒரே குரலாக எழுப்பும் போது இராணுவத் தந்துரோபாயங்களே தனியாக சமாதானத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுவது போல் தென்படுகின்றன.

எண்ணற்ற வன்செயல்களும், கொலைகளும், வயது வேறுபாடின்றி சிறுவர்கள் மீதும் குரூரசெயல்கள் புரிதலும் நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன. இன்று இந்த அழகிய தீவில் கொலைக் கலாசாரம் ஒன்று உருவாகி வருகின்றது போல் தெரிகின்றது. எவ்வகையான வேற்றுக் கருத்துக்கள் காணப்படினும் இன்று நாட்டில் நிலவும் சூழ்நிலை ஒன்றை மட்டும் தெளிவாக உணர்த்துகின்றது. அரசியல் தீர்வொன்றை கண்டுபிடித்து சமாதானத்தை அடைய அதனை பயன்படுத்த வேண்டும் என்பதே அந்த சூழ்நிலையாகும்.

மனித மாண்பும் சம உரிமைகளும் நிச்சயமாக்கப்படாதவரை சமய - இன - மொழி ரீதியில் பாரபட்சங்கள் காட்டப்படுகின்றவரை எமது நாட்டில் ஒற்றுமை, சாந்தி, சமாதானம் போன்றவற்றை எட்டவே முடியாது. இரண்டாவது வத்திக்கான் சங்கத்தில் கூறப்பட்டது போல், சமாதானம் அடையப்பட ஆக்ரோசமான சண்டைக்குரிய காரணங்கள் முதலில் களையப்பட வேண்டும். கடந்த நான்கு சகாப்தங்களுக்க மேலாக நாடு எதிர் கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வர எமது நாட்டு அரசியல் தலைவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஓர் அரசியல் தீர்வைக் கண்டுபிடிக்க நேர்மையான - உண்மையான - முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே சமாதானத்தின் மன்னரின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளை கடவுளின் பெயராலும் எமது மக்களின் சார்பாகவும் அரசியல் தலைவர்களாகிய உங்களிடம் வேண்டுவது; சுயநலன்களைத் துறந்து சமாதானத்தைப் பெற உழைக்க வேண்டும். எமது நாட்டை இத்தவிர்க்க முடியாத அழிவிலிருந்து பாதுகாத்து ஒன்றிணைக்க ஊக்கமுடனும், விடா முயற்சியுடனும், நம்பிக்கையுடனும் செயற்பட வேண்டும் என்பதேயாகும். எமது எதிர்கால சந்ததியினருக்கு வன்செயலும் கொலைகளும் நிறைந்த கலாசாரத்தையும், ஒற்றுமையின்மையும் விட்டுச் செல்வது மிகவும் பாரதூரமான அநீதி என உணருகின்றோம்.

*நாட்டின் மீதும் மக்கள் மீதும் உறுதியான நம்பிக்கை வேண்டும்*

ஏனைய எல்லாவற்றையும் விட எமது நாட்டின் மீதும் மக்களின் மீதும் உறுதியான நம்பிக்கை வைத்தால் இன்னும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள வழிகள் பல உள்ளன என நம்பலாம். 25 வருடங்களாக நாம் வற்புறுத்தி மீண்டும் மீண்டும் கூறுவது ஒன்றையே! ஆயுதச் சண்டையால் எமது பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுப் கொள்ள முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்த விழைகிறோம். பேச்சு வார்த்தையின் மூலம் மட்டுமே அனைத்து துறைகளிலும் அனைத்து மக்களுடைய எதிர் பார்ப்புக்களையும் பூர்த்தியாக்கக்கூடிய தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே இன்றைய காலத்தின் கட்டாய தேவையுமாகும்.

நாம் தொடர்ந்தும் இன, மத, மொழி ரீதியில் பாரபட்சங்களை மேற் கொள்ள முடியாது. நாம் அனைவரும் இலங்கையர்கள் என உணரத் தொடங்கி இன, மத, மொழி சார்பில் உள்ள வேற்றுமைகளை களைந்து கொண்டு நாம் ஒவ்வொருவரும் இலங்கைக் குடும்பத்தின் சகோதர சகோதரிகள் என ஏற்று வாழத் தொடங்கினால் சமாதானத்திற்கு எதிரான அனைத்து தடைகளையும் வெல்ல முடியும். இவ்வருடம் நாம் வெளிப்பகட்டான ஆடம்பரங்களுடன் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட முடியாது. பல இடங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சண்டை சச்சரவுகளினால் ஆண்களும் பெண்களும் சிறார்களும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் ஆடம்பரங்களைத் தவிர்ப்பது நன்று. எம்மிடையே வருவதற்கு கிறிஸ்து எளிமையான முறையில் மனிதனாக பிறந்து இன்று பல துன்பங்களை சந்திப்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு வழிகாட்டுகின்றது. விசேடவிதமாக அகதி முகாம்களில் போதிய தங்குமிடம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகள் இன்றி அல்லற்படும் சிறார்கள் மீது எமது கவனம் திரும்ப வேண்டும். நத்தார் வாழ்த்து மடல்கள் அனுப்புவதையும் தேவையற்ற வெளிக் கொண்டாட்டங்களில் அதிக செலவுகளையும் தவிர்க்க வேண்டும். தற்கால சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மறை மாவட்டங்களில் வாழும் சிறார்களின் நலனுக்கு இவற்றை செலவிட்டால் அது மிகவும் பலன் தரும்.

எமது நாட்டிற்காக இக்காலத்தில் ஆழ்ந்த செபங்களில் ஈடுபட்டு தியாகத்துடன் செயற்பட வேண்டும் என மக்களாகிய உங்களைப் பார்த்து அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம். நாம் இந்த அழகிய கிறிஸ்து பிறப்பு விழாவில் அல்லற்படும் மக்களின் மீது அன்பை வெளிப்படுத்தி அவர்கள பால் அக்கறையுடன் வாழ வேண்டும். அப்போது கிறிஸ்து பிறப்பின் உண்மை அர்த்தத்தை கொண்டுள்ள மகிழ்ச்சி, உள்ளார்ந்த அமைதி, நம்பிக்கை எம்மில் ஏற்பட எம்மை இறைவன் ஆசிர்வதிப்பார் என்பதில் ஐயமில்லை.

இப்படி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது. (ப)

## நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திசாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நத்தார் விழா பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நத்தார் கீதங்கள், நாடகம், நத்தார் பாப்பாவின் பரிசளிப்புகள், அருட்தந்தை ரவிச்சந்திரன் அடிகளாரின் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (203)

## சமைத்த உணவு விநியோகம்

நாவலி, டிசெ.24

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நாவாந்துறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 538 பேருக்கு அப்பகுதி அனர்த்த முகாமைத்துவ குழுவின் உதவியுடன் சமைத்த உணவுகளை வழங்கியுள்ளது. (202-100)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 09 | செவ்வாய்க்கிழமை 25.12.2007 |
| திதி : துதியை | பி.ப. 04.36 |
| நட்சத்திரம் : | புனர்பூசம் பிற்பகல் 04.05 |
| சுபநேரம் | : 10.56 - 12.26 |
| ராகுகாலம் | : 02.26 - 04.56 |

# ஒன்றிணைந்த தொண்டுப் பணிகளால் மக்களுக்குப் பெரும் விமோசனம்

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

எமது மக்களின் இக்கட்டான நிலைமைகளின் போது தொண்டு நிறுவனங்கள் பலவும் ஒன்றிணைந்து செயற்பட்டமை யால் அவர்கள் தமது பிரச்சினைகளை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்து கொண்டார்கள். இப்படித் தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ்.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய வாமதேவா தியாகேந்திரனின் 56 ஆவது பிறந்ததின நிகழ்வு அண்மையில் யாழ். நாவலர் வீதியிலுள்ள நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது. தியாகி அறக்கொடை நிறுவனப் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு சொன்னார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்.மாவட்டத்தில் தொண்டுப் பணிகளை அரச அரசார்பற்ற நிறுவனங்களும் ஐ.நா. நிறுவனங்களும் மற்றும் சமூக, சமய நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. மக்களின் இக்கட்டான நிலைமைகளின் போது இந்நிறுவனங்கள் யாவும் ஒன்றுபட்டுச் செயற்பாடாமையால் எமது மக்கள் தமது பிரச்சினைகளை ஓரளவுக் காவது நிவர்த்தி செய்து கொண்டார்கள். இந்த மக்கள் பணிகளில் தியாகி அறக்கொடை நிறுவனம், வேறுபாடுகளைக் கடந்து சகல இடங்களிலும் - சகல மக்களுக்கும் - ஆற் றிய பணிகள் மெச்சத்தக்கன. இப்படி அரச அதிபர் கூறினார்.

இந்நிகழ்வில் வழக்கமான உதவி திட் டங்களுக்கு மேலாக மேலும் சில உதவித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் வலயங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குச் சப்பாத்து வழங்கல், யாழ்.மாவட்டத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆங்கில வகுப்பு அங்குரார்ப்பணம், காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் நூலகத்திற்கென நூல்கள் அன்பளிப்பு, நலிவுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தலா ரூபா 5 ஆயிரம் வழங்கல், தியாகி அறக்கொடை நிறுவனத்தில் பணியாற்றும் யுவதிகளின் எதிர்கால நன்மை கருதி பண வைப்புச் செய்யப்பட்ட வங்கிப் புத்தகம் கையளிப்பு, நவீல்ட் பாடசாலை மாணவருக்கென அன்பளிப்பாக படுக்கை விரிப்பு வழங்கல், நிறுவன ஸ்தாபகரின் தந்தை கனகசபை வாமதேவாவின் ஞாபகார்த்தமாக யாழ். பரியோவான் கல்லூரியில் ரெனிஸ் விளையாட்டுத் திடல் ஒன்றை அமைப் பதற்காக ரூபா ஒரு லட்சம் காசோலை அன்பளிப்பாக வழங்கல் ஆகிய உதவிப் பணிகள் ,அங்கு மேற்கொள்ளப்பட்டன.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE
## NORTHERN EXTENSION
DUTCH ROAD, UDUVIL, CHUNNAKAM

அசெம்பிளிஸ் ஒப் கோட் வேதாகமக் கல்லூரி வட பிராந்தியம்
டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்

**"Equip yourself to Serve God"**

Courses for Diploma in Theology (2years) for the year of 2008.
Application forms are available for new admissions.

| | |
|---|---|
| **Closing Date:** | **05.01.2008** |
| **Registration & Interview:** | **10.01.2008** |
| **Commencement:** | **15.01.2008** |

**Modular Evening Courses on Weekends.**

Apply to:

The Dean of Students,
Assemblies of God Bible College -
Northern Extension,
Dutch Road, Uduvil.

Phone fax-0094212225501,0779194622
E-Mail- suriraja@sltnet.lk

*"Distinctively Pentecostal"*
*(Accreditation with ATA)*

(69253)



# CB Computer Academy
:-Station Road, Kondavil. :-021-4590291

G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
## இலவசக் கணனிக்கருத்தரங்கு

காலம்: 25.12.2007 (Tuesday) கிறிஸ்மஸ் தினம்
இடம்: C.B Computer Academy விரிவுரை மண்டபம்
நேரம்: காலை 9:30

100m CB
Station Rd.

கணனி தொடர்பான அறிமுகம்...

G.C.E(O/L) இல் ICT ஐ ஒரு பாடமாகக் கற்காதவர்களுக்குப் பொருத்தமான கணனிக் கற்கை நெறிகள் என்னென்ன...

G.C.E(O/L) இல் ICT ஐ ஒரு பாடமாகக் கற்றவர்களுக்குப் பொருத்தமான கற்கைநெறிகள் என்னென்ன...

G.C.E(A/L) இல் GIT ஐ வெற்றிகரமாக எதிர்கொள்ளப் பொருத்தமான கற்கைநெறிகள் என்னென்ன...

உங்களுக்காக இம்முறை எம்மால் வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன...

புதுவருடத்தை முன்னிட்டு
நாம் உங்களுக்கு வழங்குகின்ற
அரிய சந்தர்ப்பம் இது!
தவறவிடாதீர்கள்!!

G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுடன் ஏனையோரும் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ள இந்த மூன்றாக விடுமுறையைப் பயனுள்ளதாக்குங்கள்.
புதுவருடத்தை முன்னிட்டு நாம் கொடுக்கும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கருத்தரங்கிற்கு வரும் உங்கள் பிள்ளையிடம் 100/= கொடுத்து அனுப்புங்கள்.
இத்தொகை அவர் கணக்குப் பொருத்தமான கற்கைநெறி ஒன்றுக்குப் பதிவுசெய்யப் போதுமானது.

Station Rd. | கே.கே.எஸ் வீதி | பொற்பதி வீதி | பலாலி வீதி

இன்றே பதிவுகளை மேற்கொள்வது விரும்பத்தக்கது!



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

944 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம்

**28 33 41 48**

**21-12-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5387733 - 5401680

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 301,668 | 10/- | 3,016,680/- |
| 2 இலக்கங்கள் | 27,736 | 20/- | 554,720/- |
| 1 இல. + லக்கினம் | 27,476 | 30/- | 824,280/- |
| 2 இல. + லக்கினம் | 2,537 | 100/- | 253,700/- |
| 3 இலக்கங்கள் | 747 | 500/- | 373,500/- |
| 3 இல. + லக்கினம் | 68 | 5,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 5,762,880/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 360,241 | | 6,786,380/- |

**இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,674,050/-**

தொடர் இலக்கம் 4514457 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறாத டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 5390511-0-23 |
| பதுளை | 5391957-4-84 |
| பொலன்னறுவை | 5387976-0-60 |
| குருநாகல் | 5391092-7-82 |
| கேகாலை | 5393562-8-79 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
31, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## உடனடி விற்பனைக்கு
சொந்தப் பாவனையிலுள்ள விஜாக் பொக்ஸர் மோட்டார் சைக்கிள், ரி.வி.ஸ்ராண்ட் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- இல.45 சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
(பி.ப 3 மணிக்குப் பின்னர்) (69283)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கிருஷ்ணன் விமலேஸ்வரன்**
(யாழ்.மத்தியகல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

மலர்வு 07 - 04 - 1974 | உதிர்வு 24 - 12 - 2005

ஈராண்டு வந்து ஓடி முடிந்தாலும்
ஒளிவீசும் முகத்தை மறக்கத்தான் முடியுமா?
புன்னகை பூத்த பூமுகத்தின் பொலிவுதனை
எம் நெஞ்சத்தில் சுமந்து துடிக்கிறோம் செல்வமே.

**குடும்பத்தினர்.**

*தவசிகுளம்,*
*கொடிகாமம்.* (69252)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கதிர்காமு கந்தசாமி**

தாயின் மடியில் 20.01.1941 | ஆண்டவன் மடியில் 24.11.2007

24.11.2007 அன்று இறைபதமடைந்த யார்க்கரு, கரவெட்டியைப் பிறப்பிடமாக வும் 190 ஆம் கட்டை, நுணா வில்மேற்கை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தசாமி அவர்களது மரணச்சடங்குகளில் சகலவிதத்திலும் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (24.12.2007) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த் தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்.**

190 ஆம் கட்டை,
நுணாவில். *(69245)*

### தொலைபேசி இணைப்பு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிச.24

பண்டத்தரிப்பு-பிரான்பற்று உபதபாலகத்திற்கு முதற்கட்டமாக தொலைபேசி இணைப்புவழங்கப்படவுள்ளது.

வடக்குபிரதிஅஞ்சல்மா அதிபர் வீ.குமரகுரு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

உப- தபாலகத்திற்கு தொலைபேசி வழங்கலுக்கான விவரங்களைபெற்று அதனை உரிய நிறுவனத்தின் ஊடாக அனுப்பிப் பெறப்பட உள்ளது.

(203-95)

## வாழ்த்துகின்றோம்





திருமதி பொன்.பாக்கியம் | செல்வி செ.சசிகலா

கொழும்பு கலாசாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2007ஆம் ஆண்டுக்கான தேசிய கலை இலக்கியப் போட்டியில் அகில இலங்கையில் வலிகாமம் மேற்கைச் சேர்ந்த (சுழிபுரம்) பண்டிதை திருமதி பொன்.பாக்கியம் அவர்கள் கவிதை திறந்த போட்டியில் முதலாம் இடத்தையும் வட்டு.இந்துக் கல்லூரி மாணவி செல்வி செ.சசிகலா பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமைக்காக வலி.மேற்கு கலாசாரப் பேரவை மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

தலைவரும் (பிரதேச செயலர்), கலாசாரப் பேரவையினரும்
*வலி.மேற்கு கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம் சங்கானை.* (69272)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி றீற்றம்மா றூசையா**
(ஓய்வு பெற்ற தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)



மண்ணுலகம் 16★02★1933
விண்ணுலகம் 24★12★2006

எங்களோடு ஒன்றித்து வாழ்ந்து
எங்களை விட்டு நீர் வெகுதூரம் சென்றாலும்
உமது நினைவு இன்றும் எமது நெஞ்சினிலே
இவ்வுலகம் எனும் நாடக மேடையில்
பல வேடங்களில் நடித்து இப்போது
விண்ணுலக வீட்டை நாடிச்சென்ற
உமக்கு ஆத்ம சாந்தி உண்டாக நாம் வேண்டுகிறோம்.

செபஸ்ரியார் றோட்,
யாழ்ப்பாணம். (69103)

*என்றும் உமது நினைவுடன்*
**குட்டி குடும்பம்**

## 45ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 16 ★ 09 ★ 1977



உதிர்வு 11 ★ 11 ★ 2007

**திருச்செல்வம் ஜெயக்குமார்** *(சுதா)*
(சுதா கிறேஸர் உரிமையாளர், கைதடி)

கடந்த 11.11.2007 அன்று அகாலமரணமடைந்த எமது ஏக புத்திரன் திருச்செல்வம் ஜெயக்குமார் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (25.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*79, நல்லூர் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (69260)

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

# சின்னப்பு தங்கமணி



தோற்றம்: 05.03.1932
மறைவு: 03.01.2006

ஆயிரம் சொந்தங்கள் இருந்தென்ன..
ஆருயிராய் நீர் இருந்தீர்!
அன்பின் அம்மாவே..
அகிலத்தில் நாமுயர வழிகாட்டிய
தெய்வமே!
எங்கு சென்றீர்....

**குடும்பத்தினர்.**

*பாடசாலை வீதி,*
*ஆறுகால்மடம்.* (69202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போரூட் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் புனரமைக்கப்பட்ட வீதியைத் திறந்துவைப்பதையும் புதிதாக அமைக்கப்பட்ட வீடு ஒன்றைப் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் திறந்துவைப்பதையும் சக்கோட்டை புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை எம்.பத்திநாதர், பொலிகண்டி கந்தவனக் கடவை கந்தசாமி ஆலயக்குரு வை.வைத்திய நாதக்குருக்கள் ஆகியோர் பயனாளிகளுக்கு வீட்டுத் திறப்புகளைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சுந்தா)

### வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து

# வடமராட்சி வடக்கு, கிழக்கில் குடியமர்ந்துள்ள சொந்தக்காணி உள்ளவர்களுக்கு வீடுகள்

## விரைவில் அமைக்கப்படும் என்கிறார் அரச அதிபர்

கரவெட்டி, டிசெ,24

வலிகாமம், வலி. வடக்கு ஆகிய பிரதேங்களிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு, கிழக்கில் குடியமர்ந்துள்ள - சொந்தக் காணியுள்ள மக்களுக்கு விரைவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான போரூட் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 34 வீடுகள் கடந்த வெள்ளிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் அந்த நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட பொலிகண்டி குடியேற்றத்திட்ட வீதியும் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: வீடு இல்லாத அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

குறிப்பாக கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு - வலிகாமம், காங்கேசன்துறை, சேந்தாங்குளம், மயிலிட்டி, பலாலி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு, கிழக்கில் குடியமர்ந்துள்ள சொந்த நிலம் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

வீட்டுத் திட்டங்களுக்கான நிதி உதவியை வழங்க நிறுவனங்கள் முன்வந்துள்ள போதும் பயனாளிகளின் ஒத்துழைப் பின்றி எதனையும் சாதிக்க முடியாது.

நிறுவனங்கள் தமது வரம்பெல்லைக்குள் நில்லாது பயனாளிகளின் ஒத்துழைப்புடன் அவர்களின் மேலதிக ஆலோசனைகளின்படியே வீடுகளை அமைத்துக் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டோம். தற்போது கையளித்துள்ள வீடுகளைக் கட்டிய நிறுவனங்கள் அவ்வாறு செயற்பட்டதால் சிறப்பாக வீட்டுத் திட்டம் பூர்த்தியடைந்துள்ளது. இதனையே சகல நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் பொலிகண்டி மேற்கில் அமைக்கப்பட்ட 12 வீடுகளையும் பொலிகண்டி குடியேற்றத் திட்ட வீதியையும் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சக்கோட்டையில் அமைக்கப்பட்ட 22 வீடுகளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் கே. சரவண பவானந்தன், போரூட் நிறுவன உதவித் திட்டமிடல் முகாமையாளர் ரி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசியுரைகளை சக்கோட்டைப் பங்குத் தந்தை அருட் திரு. எம். பத்திநாதர், பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தான பிரதம குரு சிவப்பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

(202-70)

## பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

இவை அடுத்த வாரம் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எம்.ஜி.ஆர். நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிசெ.24

அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை நடத்தும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 20ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் எம்.ஜி.ஆரின் நினைவு நிகழ்வுடன் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் முன்னாள் தலைவர் பொன். மதிமுகராஜாவின் 9ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 3ஆம் ஆண்டு நினைவு நிக்ழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன.

(அ-2)

## வாய்க்கால்கள் திருத்தப்படாமையால் மழைநீர் தேக்கம் தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலைமை உருவாகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.குடாநாட்டில் உள்ள வெள்ள வாய்க்கால்கள் பலவும் உரிய காலத்தில் திருத்தம் செய்யப்படாமையால் வெள்ளம் ஓட முடியாது நிற்கிறது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய நிலைமை தோன்றியுள்ள.

உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்கள் பலவருடங்களாக துப்புரவு செய்யப்படாமல் காணப்படுகின்றது.

இதேபோன்று பெரும் தெருக்களில் வெள்ளம் வடிந்தோட வீதிக்குக் குறுக்கே வைக்கப்பட்டிருந்த குழாய்கள் நீக்கப்பட்டும் மற்றும் வெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால்கள் குப்பைகள், கழிவுகளால் மூடப்பட்டும் உள்ளன. இதனால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் ஏன் கவனம் எடுக்கவில்லை எனவும் மழை காலத்திற்கு முன்னர் இதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(203-68)

## நல்லூர் பிரதேச சபை நடத்திய வாசிப்பு மாதபோட்டி முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.24

நல்லூர் பிரதேச சபையினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு-

**பொது அறிவுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு** - வி.கௌசிகா - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம், உ.பகீரதன் - யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், சி.தயானி - யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**மத்திய பிரிவு** - பொ.பங்குஜன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, த.கஜேந்திரன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, செ.மயூரன் - யா/முத்துத் தம்பி மகா வித்தியாலயம்.

**மேற்பிரிவு** - சி.கஜேந்தினி - யா/இந்து மகளிர் கல்லூரி, ம.அருளினியன் - யா/இந்துக் கல்லூரி, க.ஜனனி - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

**கட்டுரைப் போட்டி**
(மேற்பிரிவு மட்டும்)

உ.கௌசிகா - யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், நா.கிருஷ்ணவேணி - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம், க.நிரோஜினி - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(203)

## நத்தாரை முன்னிட்டு உடுபுடைவைகள்

வலி.தென்மேற்கு, டிசெ.24

மாதகல் கிழக்கு சிறுவர் பாதுகாப்புக் குழு பிரிவிலுள்ள 150 மாணவர்களுக்கு கிறிஸ்மஸ் நத்தார் பண்டிகையை முன்னிட்டு உடுபுடைவைகளை அன்பளிப்பாக வழங்கவுள்ளது. சிறுவர் கழகங்களில் வைத்து எதிர்வரும் 27ஆம் திகதி இந்த உடுபுடைவைகள் வழங்கப்படவுள்ளதாக மாதகல் கிழக்கு கிராம அலுவலர் இ.துரைராசா தெரிவித்தார்.

## மீன்பிடித் தடைவிதிப்பால் செட்டிபுலத்தில் 150 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

### சமுர்த்தி நிவாரணமே இவர்களுக்குக் கிடைக்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.24

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீன்பிடித் தொழில் தடையால் வேலணை, செட்டிபுலத்தில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 596 பேர் பஞ்சம், பசி, பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளன.




இந்நிலைமை நீடிக்குமானால் பெரும் கஷ்ட நிலைக்கு தள்ளப்படும் அவல நிலை உருவாகும்.

இவ்வாறு வேலணை செட்டிபுலம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.மார்க்கண்டுதாசன் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ஜே/13, ஜே/15,ஜே/16 ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாக வேலணை செட்டிபுலம் கிராமம் உள்ளது.

இக்கிராமம் மீன்பிடித் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டு ஜீவனோபாய வாழ்க்கையை நடத்துகின்றது.

கடந்த 11-08-2006 இற்குப் பின்னர் செட்டிபுலம் கடற்கரை பகுதி மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டு இன்று வரை நீடிக்கிறது.

இந்நிலையில் எமது பகுதியில் 80 சத வீதமான மக்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றனர்.

எனவே கடற்றொழில் பாதிப்பினால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கும் -

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நலிவுற்றோர் நிவாரணம் வழங்க பிரதேச செயலர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாவிடில் எமது பிரதேச மக்கள் பஞ்சம், பசி, பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவதுடன் சிறுபிள்ளைகள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் உட்பட பலலும் பெரும் கஷ்டமடையும் நிலை உருவாகும் - என்றார்

(203-95)

## உடுவில் பிரதேச செயலக வளாகத்தில் ஆள்பதிவுக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

உடுவில் பிரதேச செயலக வளாகத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் கடமைகளுக்கென தனியான கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை உடுவில் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி நட்டுவைத்தார்.

இலங்கை ஆள்பதிவுத் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டைப் பணிகளை விரைவுபடுத்தும் முகமாக பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களில் தேசிய அடையாள அட்டைக்கென தனியார் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தனி அலகாக தேசிய அடையாள அட்டைப் பிரிவு இயங்குவதற்கு வசதியாக இக்கட்டடப் பணி துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டட வேலைகள் தை மாதத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(203)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.24

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் அந்த அந்தப் பிரிவு கிராம அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.

சாந்தை, காக்கைதீவு, நவாலி, வடலியடைப்பு ஆகிய பகுதிகள் வெள்ளத்தினால் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்கு வழங்குவதற்காக 150 கூரை விரிப்புகளையும் அகதிகள் புனர்வாழ்வு கழகம் 100 கூரை விரிப்புகளையும் இப்பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறுவர்கள் அதிகம் உள்ள பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் அதிக எண்ணிக்கையானவர்கள் வசிக்கும் பாதிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் இவை விநியோகம் செய்யப்பட்டு வருவதாக பிரதே செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவரிசையில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, டிச.24

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றெடுத்ததன் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசையில் இலங்கை அணி இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாம் இடத்தைப் பிடித்துக்கொண்டது. தொடரை இழந்த இங்கிலாந்து அணி இரண்டாம் இடத்திலிருந்து ஐந்தாம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கண்டியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியும், காலியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியும் சமனிலையில் முடிவடைந்தமையால் தொடர் 1-0 எனும் கணக்கில் இலங்கை வசமானது.

இதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இலங்கை அணி 109 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திற்கு முன்னேறியது. அதேயளவு புள்ளிகளைப் பெற்ற தென்னாபிரிக்கா அணி 2ஆம் இடத்தைப் பிடித்துக்கொண்டது. பங்குபற்றிய போட்டிகளின் அடிப்படையில் தென்னாபிரிக்கா அணிக்கு முன்னிலை வழங்கப்பட்டுள்ளது. இந்திய அணியும் அதேயளவு புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான தொடரை இழந்தமையைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி 2 ஆம் இடத்திலிருந்து 5 ஆம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டது. இரண்டாம் இடத்தைத் தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிக்கொண்டது. இதன் மூலம் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலியாவுக்குப் பின்னர் இரண்டாம் இடத்தைப் பிடித்த அணி என்ற பெருமையை தென்னாபிரிக்கா பெற்றுக்கொண்டது.

அணித் தரவரிசை வருமாறு:- ஆஸ்திரேலியா (143), தென்னாபிரிக்கா (109), இலங்கை (109), இந்தியா (109), இங்கிலாந்து (107), பாகிஸ்தான் (94), நியூஸிலாந்து (91), மேற்கிந்தியத் தீவுகள் (72), பங்களாதேஷ் (4).

# ஆக்ரோசமாகச் செயற்படுவோம் - சைமண்ஸ்

மெல்போண், டிச.24

டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணி ஆக்ரோசமாகச் செயற்படும் என சைமண்ஸ் எச்சரித்துள்ளார்.

சமீபத்தில் ஆஸ்திரேலிய அணி, இந்தியா வந்த போது சிறிசாந்த் உள்ளிட்ட வீரர்கள் அளவுக்கு அதிகமான ஆக்ரோசத்தை வெளிப்படுத்தினர். இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. தற்போதைய டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் ஆக்ரோசம் காட்டினால், அதற்கு உரிய பதிலடி தரப்படும் என ஆஸ்திரேலியாவின் சைமண்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இவர் அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பவையாவன:-

''பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் பலப்பரீட்சையை முடித்த கையோடு இந்திய அணி, ஆஸ்திரேலியாவைச் சந்திக்கவுள்ளது. ஆனால், நாங்கள் ஒருநாள் மற்றும் ருவென்ரி/20 போட்டிகளில் ஆடிவிட்டு குறைந்த காலக் கட்டத்தில் டெஸ்ட்டில் ஆடும் மனநிலைக்கு மாறுவது எளிதல்ல. இந்தியாவைப் போல நாங்களும் ஆக்ரோச ஆட்டத்தை வெளிப்படுத்தத் தயாராக உள்ளோம். ஆனாலும் எல்லை மீற மாட்டோம். சிறிசாந்த் பங்கேற்காதது அவருக்கு இழப்புத்தான். சுழற்பந்துவீச்சில் கூடுதல் பொறுப்பை வகிக்க நான் தயாராக உள்ளேன்.'' - இவ்வாறு சைமண்ஸ் கூறினார்.




# இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சரியான 'ஷொட்'ஐத் தேர்வுசெய்ய வேண்டும்

## ஆஸித் தொடரை வெல்ல அதுவே வழி என்கிறார் சச்சின்

மெல்போண், டிச.24

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரைக் கைப்பற்ற, இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சரியான 'ஷொட்'ஐத் தேர்வு செய்து விளையாட வேண்டும் என சச்சின் அறிவுரை கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் நாளை மறுதினம் 26ஆம் திகதி தொடங்குகிறது.

கடந்த காலங்களில் ஆஸ்திரேலிய மண்ணில் மிகச் சிறப்பாக விளையாடியுள்ள இந்தியத் துடுப்பாட்ட வீரர் சச்சின் மீண்டும் சாதிக்கக் காத்திருக்கிறார். இங்கு பங்கேற்ற 12 டெஸ்ட் போட்டிகளில் 1029 ஓட்டங்களை (54.15 சராசரி) குவித்துள்ளார். 1992-93இல் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குப் பிறகு ஆஸ்திரேலியாவை, அதன் சொந்த மண்ணில் வைத்து எந்த ஒரு அணியும் டெஸ்ட் தொடரில் வீழ்த்தியதில்லை. தவிர பொண்டிங் தலைமையிலான அணி தொடர்ந்து 14 டெஸ்ட் வெற்றிகளை பெற்று சிறப்பான நிலையில் உள்ளது. இன்னும் இரண்டு போட்டிகளில் வென்று ஸ்ரீவ் வோவின் சாதனையை (தொடர்ந்து 16 வெற்றிகள்) சமன் செய்யக் காத்திருக்கிறது. 2001இல் கொல்கத்தா டெஸ்ட்டில் வெற்றி பெற்ற இந்திய அணி, ஆஸ்திரேலியாவின் வெற்றிநடைக்கு அப்போது முற்றுப்புள்ளி வைத்தது. இதே போல இம்முறையும் பொண்டிங் படையின் வெற்றிக்கு முட்டுக்கட்டை போடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிகவும் கடினமான இத்தொடருக்கு இந்திய அணி தயாராக உள்ளதாக சச்சின் தெரிவித்துள்ளார். தற்போது நான்காவது முறையாக ஆஸ்திரேலியா சென்றுள்ள அவர் டெஸ்ட் தொடர் குறித்து அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-




''ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரைக் கைப்பற்ற வேண்டுமானால் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் மிகுந்த கவனத்துடன் விளையாட வேண்டும். சரியான 'ஷொட்'களைத் தேர்வு செய்வது மிகவும் முக்கியம். நம்மவர்கள் கிரிக்கெட் நுணுக்கங்களில் கைதேர்ந்தவர்கள். எனவே, மனதளவில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிறிது நேரம் பதற்றப்படாமல் ஆடினால், பின்னர் நிலைமையைச் சமாளித்து விடலாம்.

''1991-92இல் இங்கு முதன்முறையாக பயணம் செய்த போது, எனது துடுப்பாட்டத்தில் தேவையான மாற்றங்களை செய்யவில்லை. வழக்கமான முறையில் விளையாடினேன். போகப்போகத்தான் சில 'ஷொட்'களைத் தொடக்கத்தில் கையாளக் கூடாது என்பதை உணர்ந்து கொண்டேன்.

''இந்திய அணியின் ஆரம்ப வீரர்கள் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. என்னைப் பொறுத்தவரை சரியான வீரர்கள் தேர்வு செய்யப்பட்டால் பிரச்சினை எதுவும் இல்லை. எனினும், இது பற்றி கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அதிரடியாக துடுப்பெடுத்தாடுவதால்தான் ஆஸ்திரேலியத் தொடருக்கு ஷேவாக் தேர்வு செய்யப்பட்டார். இந்த முறையில் அவர் மாற்றம் செய்ய தேவையில்லை.

''தற்போதைய ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது. இவர்களை வீழ்த்த இந்திய அணியிலும் சிறந்த பந்துவீச்சாளர்கள் உள்ளனர். 2003-04இல் நடந்த தொடரின் போது பிரிஸ்பேன் டெஸ்ட்டில் சஹீர்கான் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். அணித்தலைவர் கும்ளே உலகின் அனைத்து ஆடுகளங்களிலும் விக்கெட் வீழ்த்தியுள்ளார். ஆஸ்திரேலியாவை வீழ்த்துவதுதான் உச்சக்கட்ட இலக்காக உள்ளது. எனவே, தற்போதைய தொடரில் வெற்றி பெற்றால், அது எனது கிரிக்கெட் வாழ்க்கையில் முக்கியமானதாக அமையும்.

''டெஸ்ட் போட்டிக்கு முன்பாக ஒரேயொரு பயிற்சிப் போட்டிதான் இருந்தது. இதனைச் சாக்குப்போக்காகச் சொல்லி யாரும் தப்பிக்க முடியாது. என்னைப் பொறுத்தவரை இரண்டு தொடர்களுக்கு இடையே போதிய அவகாசம் இருக்க வேண்டும். இந்த காலக் கட்டத்தில் குடும்பத்துடன் சேர்ந்து பொழுதைக் கழிக்கலாம். கடந்த தொடர் பற்றி மதிப்பீடு செய்து, அடுத்த தொடருக்கு சிறப்பான முறையில் ஆயத்தமாகலாம்.

''தற்போதைக்கு ஓய்வு குறித்து சிந்திக்கவில்லை. கிரிக்கெட்தான் எனது வாழ்க்கை. இந்தக் கனவுடன்தான் 18 ஆண்டுகளாக விளையாடி வருகிறேன். எனது விருப்பப்படி விளையாடுகிறேன். சில நேரங்களில் பந்துவீச்சாளர்கள் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப ஆட்டத்தில் மாற்றம் செய்வது உண்டு. தற்போது முழு உடல் தகுதியுடன் உள்ளேன். சவாலான ஆஸ்திரேலியத் தொடரை சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.'' - இவ்வாறு சச்சின் கூறினார்.

# சச்சினுக்குப் பந்துவீச ஆர்வம்

## பிரட்லீ பேட்டி

சிட்னி, டிச.24

இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான டெண்டுல்கருக்கு பந்துவீச ஆர்வமாக இருக்கின்றார் என பிரட்லீ கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் அதி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான பிரெட்லீ நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

''டெண்டுகல்கருக்கு எதிராக பந்துவீச ஆர்வமாக இருக்கிறேன். அவர் தனது கடைசி ஆஸ்திரேலிய பயணமாக இங்கு வந்திருக்கிறார். அவர் அற்புதமான வீரர். உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரருக்கு எதிராகப் பந்துவீசும் போதுதான் ஒரு பந்துவீச்சாளர் தனது திறமை எப்படி இருக்கிறது என்பதை பரிசோதித்துக் கொள்ள முடியும். எனக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்திய அணி கடந்த முறை இங்கு வந்து விளையாடிய போது மெல்போர்ன் டெஸ்டில் எனது செயல்பாடு நன்றாக இல்லை.

''ஆஸ்திரேலிய மைதானங்களில் பந்து பட்டால் எகிறும் என்று சொல்கிறார்கள். ஆனால், பேர்த் மட்டுமே அந்த நிலையில் உள்ளது. சமீப காலங்களில் நாங்கள் இங்கு ஆடியதை வைத்து பார்க்கும்போது மற்றைய ஆடுகளங்கள் வேகம் குறைவாக உள்ளன. சொல்லப்போனால் இந்திய ஆடுகளங்கள் போன்று இருக்கின்றன. ஆனால், எப்போதும் போல் வேகப் பந்துவீச்சுக்கு சாதகமான மைதானங்களாகவே இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். இங்கு எப்படி சாதிக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். அதேசமயம் அதற்கு ஏற்ற சூழல் இருக்க வேண்டும்.

''என்னுடன் ஷோன் ரெய்ற் தொடக்கப் பந்துவீச்சாளராக வீசினால் மகிழ்ச்சி அடைவேன். அதேசமயம் ஜோன்ஸனும் சமீப காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். அவர் சச்சின் டெண்டுல்கருக்கு எதிராக நன்றாக பந்து வீசி இருப்பதால் அவருக்கு தொடக்க பந்துவீச்சாளர் வாய்ப்பு உள்ளது.'' - இவ்வாறு பிரட்லீ கூறினார்.

8 ஆண்டுகளுக்கு முன்பு மெல்போண் மைதானத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்டில்தான் பிரட்லீ அறிமுகமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்டில்

# உயர்ந்தவர்கள் எனும் கர்வமிக்க மனநிலையை ஆஸ்திரேலியர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்

## ஷேன் வோர்ன் வேண்டுகோள்

மெல்போர்ன், டிச.24

தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வரும் தங்கள் அணிதான் உலகில் சிறந்தது என்ற கர்வமிக்க மனநிலை ஆஸ்திரேலியர்களிடம் இருப்பதாகவும் அதனை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் ஷேன் வோர்ன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆஷஸ் தொடருக்குப் பிறகு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். இந்த நிலையில் அவர் ஆஸ்திரேலியர்கள் கர்வ மனநிலை உடையவர்கள் என்ற தாக்குதல் ஒன்றை தொடுத்துள்ளார். இது குறித்து அவர் பத்திரிகை ஒன்றில் எழுதியிருப்பவை வருமாறு:-

''எனக்கு கிரிக்கெட் சம்பந்தமான ஒரு பிரச்சினை இருக்கிறது. அதாவது ஆஸ்திரேலிய அணிதான் உலகில் மற்ற அணிகளை விட உயர்ந்தது என்ற எண்ணம் ஆஸ்திரேலிய மக்கள், கிரிக்கெட் நிர்வாகிகள், முன்னாள் வீரர்கள், முன்னாள் பயிற்சியாளர்களிடம் உள்ளது. ஆஸ்திரேலியா உலகின் 'நம்பர் 1' அணி என்பது உண்மைதான். ஆனால், இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவுக்கு பலசோதனைகள் வரும். ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி மற்றொரு அணி முதலிடத்தைப் பிடிக்கும். இது கிரிக்கெட்டில் உள்ள வழக்கமான சுழற்சி ஆகும். எனவே இந்த கர்வ மனப் போக்கை ஆஸ்திரேலியர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்.

''ஆஸ்திரேலிய அணியில் மூத்த வீரர்கள் நீண்ட நாட்கள் நீடிக்க முயற்சி செய்யக்கூடாது. ஓய்வு பெறுவது அவர்கள் விருப்பம்தான். இருப்பினும் அணியின் எதிர்கால நலனை கருத்தில் கொள்ளவேண்டும். அணித் தேர்வுக் குழு உறுப்பினர்கள் மூத்த வீரர்களிடம் அணியில் இளம்வீரர்கள் இடம்பெறச் செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறவேண்டும்.

''என்னைப் பொறுத்தவரை ஒரு நாள் போட்டி முடிந்து விட்டதாகவே நினைக்கிறேன். குறைந்த நேரத்தில் நடக்கும் ருவென்ரி /20 போட்டி ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்துகிறது. எனவே, இந்த வகைப் போட்டிகளை அதிகமாக நடத்த வேண்டும். 50 ஓவர் போட்டி என்பதை 40 ஓவராக குறைக்க வேண்டும். 40 ஓவர் போட்டி, 20 ஓவர் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டி ஆகியவை மட்டுமே இருக்க வேண்டும். 20 ஓவர் போட்டிகள் கனடா, நெதர்லாந்து போன்ற நாடுகளில் கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவும்.'' - இவ்வாறு வோர்ன் கூறியுள்ளார்.




# கில்கிறிஸ்ற் செய்யும் ஆட்டமிழப்பு ஒவ்வொன்றுக்கும் 6 இலட்சம் ரூபா

மெல்போர்ன், டிச.24

மெல்போணில் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் கில்கிறிஸ்ற் ஆட்டமிழக்கச் செய்யும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் ரூபா 6 இலட்சம் வழங்கப்படும் என்று தனியார் விளம்பர நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது. இந்தத் தொகை ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் மெக்ராத்துக்குச் சொந்தமான அறக்கட்டளைக்கு வழங்கப்படும்.

கில்கிறிஸ்ற் 92 டெஸ்ட் போட்டிகளில் இது வரை 391 பேரை ஆட்டமிழக்கச்செய்திருக்கிறார். அவர் மேலும் 5 பேரை ஆட்டம் இழக்கச் செய்தால் ஆஸ்திரேலிய முன்னாள் விக்கெட் காப்பாளர் இயன் ஹீலியின் 395 ஆட்டமிழப்புக்கள் என்ற சாதனையை முறியடித்து விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் எந்த வகையான அதிகாரப் பரவலாக்கலும் முழுமையாக மாட்டாது

## ஸ்ரீகாந்தா எம்.பி விவரிக்கிறார்



கொழும்பு, டிசெ, 24

இன்றைய ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தின்கீழ்மேற்கொள்ளப்படும்எந்தவகையான அதிகாரப் பரவலாக்கலும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் முழுமையானதாகவும் ஒரு போதும் அமைய முடியாது

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீ காந்தா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மாகாண மட்டத்தில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ள கருத்தை விமர்சித்து அவர் விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் மேலும் தெரிவித் திருப்பதாவது:-

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வருவதற்கு முன்னர் மாகாண மட்ட அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டம் அரசாங்கத்தினால் உத்தியோக பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருக்கின்றார்.

இலங்கையின் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை அதிகளவில் விரிவுபடுத்தும் விதத்தில் இந்தத்தீர்வுத் திட்டம் அமையும் என்ற செய்தியையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் வடகிழக்கு மாகாணங்களுக்கான ஓர் இடைக்கால நிர்வாகத்துக்கு தலைமைதாங்கும் தனது ஆவலையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் முதலில் ஒரு விடயத்தை புரிந்து கொள்வதற்கு இனிமேலாவது முயற்சிக்கவேண்டும்.

இலங்கைத்தீவின் அதிகாரமையம் என்பது முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கத்தின் கையில் - கொழும்பில் - வைத்திருக்கப்பட வழி வகுத்திருக்கும் இன்றைய ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தின் கீழ் மேற்கொள்ளப் படும் எந்தவொரு அதிகாரப்பரவலாக்கலும் அர்த்தபுஷ்டி கொண்டதாகவும் முழுமையானதாகவும் ஒரு போதும் அமையவேமுடியாது என்பதுதான் அந்தவிடயம்.

### நிச்சயமற்ற நிலைமை

ஆணைப் பெண் ஆக்கவும் பெண்ணை ஆண் ஆக்கவும் தவிர சகலதையும் சாதிக்கும் அதிகாரம் கொண்டது என வர்ணிக்கப்படும் நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்பது, தலைக்கு மேலே கூரிய கொடுவாள் ஒன்று தொங்கிக் கொண்டிருக்கும் நிச்சயமற்ற நிலைமையின் மத்தியிலேயே நீடிக்கவும் வேண்டியிருக்கும்.

கொடூர யுத்தத்திற்கு அடிகோலி, கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சனைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வே இன்றைய அவசரத் தேவை.

கட்டம் கட்டமாக 'தங்குமிடங்கள்' கொண்ட ஓர் அரசியல் யாத்திரையை 'அரசியல் தீர்வு' விடயத்தில் அறிவு படைத்த மனிதர் எவரும் சிந்திக்க முடியாது.

### ஒற்றையாட்சி அபிமானத்தைக் கை விட வேண்டும்

அரசியல் தீர்வுக்கான முதற்படியாக, 'ஒற்றையாட்சி' மீது சிங்கள அரசியல் அதி கார சக்திகள் அனைத்தும் கொண்டிருக் கும் 'பிடிவாதம் நிறைந்த - அதீத அபிமா னத்தை', அவை கைவிட வேண்டும்.

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் 'வரலாற்று ரீதியான வாழ்விடம் - வடகிழக்கு மாகாணங்கள் என்பதை ஏற்றுக் கொண்டு இலங்கையின் அரசியல் சாசனத்தின் 'ஒற்றையாட்சி' தன்மையையும், பௌத்த மதத்திற்கு முதலிடமும் முன்னுரிமையும் வழங்கும் மதச் சார்புத்தன்மையையும் நீக்கி நிறை வேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றி பூரணமானதோர் சுயாட்சியை தமிழ் பேசும் மக்களின் தாயகத்திற்கு உறுதிப் படுத்தும் ஓர் தீர்வுத் திட்டத்தையே தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியும்.

இத்தகைய தீர்வே போருக்கு முடிவு கட்டி நிரந்தர அமைதிக்கும் வழி வகுக்கும்.

இந்த யதார்த்தபூர்வமான நிலைமையினை அமைச்சர் டக்ளஸும் அவரைப் போன்றவர்களும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

### பொம்மை ஆட்சி

மேலும் 'இடைக்கால நிர்வாகம்' என்ற பெயரில் வட- கிழக்கில் ஓர் 'பொம்மை' ஆட்சிக்கு தலைமை தாங்குவதன் மூலம், இப்பொழுது யாழப்பாணக் குடாநாட்டில் கௌரவ அமைச்சரின் கட்சி அரங்கேற்றிக் கொண்டிருக்கும் 'படுகொலைக் கலாச்சாரத்திற்கு சட்டபூர்வ அந்தஸ்தை பெற்றுக்கொள்ள முடியுமேயன்றி வேறு எதையும் சாதிக்க முடியாது.

இன்னுமொன்று', தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றால் பிரபாகரன் கொல்லப்பட வேண்டும் என்றும் டக்ளஸ் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையோ, அல்லது ஈ.பி. டி.பி தலைவர் டக்ளசையோ அல்லது வேறு எவரையுமோ கொன்றால் மட்டுமே தீர்வு சாத்தியம் என்று எவராவது கருதினால், வக்கிரமான மனநோய் ஒன்றின்வன்மமான வெளிப்பாடாகவே, அதனை அனுதாபத்துடன் நோக்க வேண்டியி ருக்கும்-என்றுள்ளது

(இந்த அறிக்கையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் செய்தியாக வெளி வந்தது)


## கணபதி ஹோமம்

உசன் மிருசுவில் கஜகேணிப் பதியில் விற்றிருந்து அருள் பாலிக்கும் கஜகேணிப் பிள்ளையாருக்கு சர்வமங்கள வருடம் 25.12.2007 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், வேண்டி விஷேட திவ்யஹோமம், விஷேட திரவியாபிஷேகம், தீபாராதனை, வீதியுலா என்பன இடம்பெற விநாயகப்பெருமான் அருள்பாலித்துள்ளார். அடியார்கள் வந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

பிரதமகுரு:
இ.கேதீஸ்வரக்குருக்கள் (கந்தசாமிகோவில், உசன்)
(ஆஞ்சனேயர் வாக்கு உபாசகர்) மருதனார்மடம்

விளம்பர அனுசரணை: யாழ்ப்பாண மின்னகம்
141, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## மரியன்னை பேராலய நத்தார் திருப்பலி

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.மரியன்னை பேராலய நத்தார் கூட்டுத் திருப்பலி இன்று திங்கட்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகுதோமஸ் சவுந்தரநாயகம் தலை மையில் நடைபெறும்.

நத்தார் திருப்பலி செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையிலும் 7.45 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருட்கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் தலைமையிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-226)


## மிகவும் குறைந்த கட்டணத்தில்

வெளிநாட்டுப் பொதிகள் (Parcel)சேவை பின்வரும் நாடுகளுக்கு

| | 1 கிலோ | 2 கிலோ |
|---|---|---|
| அமெரிக்கா, கனடா | 2,600/= | 4,000 /= |
| பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், இத்தாலி, கொலண்ட், நோர்வே, சுவீடன், டென்மார்க், ரஷ்யா, நியூசிலாந்து, ஆஸ்ரேலியா | 1,800/= | 3,000/= |
| மத்திய கிழக்கு நாடுகள்: சவூதி அரேபியா, டோகா கட்டார் - ஓமான், குவைத், துபாய், ஜோர்டான் மற்றும் இந்தியா, மலேசியா | 1,400/= | 2,200/= |

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருள்கள், வீடியோ, கடிதங்கள், ஆவணப்பத்திரங்கள் ஆகியவற்றை எம்மூலமாக அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு: RAINBOW TRAVELS & TOURS,
இல. 32, 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல 021 222 3237
(ராஜா கிறீம் கவுஸுக்கு அருகாமையில்) (69232)



அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் ஆதரவில்
யாழ்.றோட்டறிக் கழகமும்
யாழ்.மைய றோட்டரற் கழகமும்
இணைந்து நடத்தும்
டிசம்பர் 2007 க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான

### வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்: இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபம்
காலம்: 26.12.2007 புதன்கிழமை காலை
9 மணி- பி.ப-1 மணி

கருத்துரை வழங்குவோர்:
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர் K.சிவநாதன்
கலாநிதி T.வேல்நம்பி
திரு.K.விக்னேஸ் — திரு-ஏ-குமாரவேல்
திரு.N.திலகரத்தினம் — திரு.S.ஞானேந்திரன்
திரு.M.அலோசியஸ் — திரு.M.மகேஸ்வரன்

மாணவர்களும் பெற்றோர்களும்
அழைக்கப்படுகின்றனர்


## கண்ணீர் அஞ்சலி

21.12.2007 அன்று இறைவனடி சேர்ந்த
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி
முன்னாள் விஞ்ஞான ஆசிரியை

### திருமதி பாராளும் சகத் திருச்செல்வம்

அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2007) திங்கட்கிழமை பட்டகாடு, மூன்றாம் ஒழுங்கை, வவுனியாவில் நடைவுள்ள தருணத்தில் அவரது உடன் ஆசிரிய, நண்பர்கள் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து தமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஆசிரிய நண்பர்கள்
இளவாலை மெய்கண்டான் ம.வி

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளிப்பிள்ளை கந்தசாமி (இரத்தினம்)



துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 22.12.2007 அன்று கொழும்பில் இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பையா பாக்கியத்தின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற திரு. சின்னையா கந்தசாமியின் அன்பு மனைவியும், சுமதி (இத்தாலி), பாமதி (ஆசிரியை, யாழ். ஞானாசாரியார் கல்லூரி), யோகநாதன் ( Engineer SriLanka Telecom) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசுந்தரம் (இத்தாலி), ஞானவேல் (ஸ்ரீராசா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - திருகோணமலை), அருணா (Health Curative Dept. - cmc) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 24.12.2007 திங்கட்கிழமையன்று பி.ப 12.30 மணிளவில் மகிந்த மலர்சாலையில் (கல்கிசை) நடைபெற்று 2 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை மிகத் துயரத்துடன் அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:- 2438469
0777252660

தகவல்:
மக்கள், மருமக்கள்

### சுந்தர்லிங்கம் நவஜீவராஜா

(அண்ணா தொழிலக ஊழியர்)

சுந்தர்லிங்கம் நவஜீவராஜா (அண்ணா தொழிலக ஊழியர்) 22.12.2007 அன்று காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம்-சிதம்பரேஸ்வரியின் மூத்த மகனும், துரையப்பா-ராசம்மாவின் மருமகனும், மனோரஞ்சிதமலரின் கணவரும், கிரிகரனின் தந்தையும், மல்லிகாதேவி, புஸ்பராஜா, விஜயகுமார், ராசாகுமார் (ஜேர்மனி), உதயகுமார் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், சிற்றம்பலம், சுமதி, தங்கராணி, சாந்தி (ஜேர்மனி), ஜெயராணி (ஜேர்மனி), சுமத்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமிஅம்மன் கோயிலடி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

அன்னை மடியில்
05 - 11 - 1948



மண்ணின் மடியில்
25 - 11 - 2007

அமரர்

### பொன்னுத்துரை நாகராசா (பாகவதர்)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியகிரியையும் ஆத்மாசாந்தி பிரார்த்தனையும் நாளை (25.12.2007) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப்பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54, இலந்தக்குளம் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிரன் கணபதி

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் கணபதி 22.12.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நேசமணியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் (கனடா), ரவீந்திரன், ரவிசங்கர், ரவிசாந்தன், சுமதி, கருணா, கௌரி, யமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பன், கமல், கௌரி, சுமதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.12.2007) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை; மட்டக்களப்பில் மழை தொடர்கிறது ஆயிரக்கணக்கில் குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, டிசெ. 24

முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 4,307 குடும்பங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 8,234 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நாட்டில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும்மழை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

முல்லைத்தீவு,மட்டக்களப்பு, பதுளை, மாத்தளை, அநுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களிலேயே அதிகளவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நான்காயிரத்து 307 குடும்பங்களில் 94 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் இரு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பில் ஆயிரத்து 157 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 677 பேர் 6 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளையில் 81 குடும்பங்களில் 67 குடும்பங்கள் 2 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தில் 11 குடும்பங்களும் அநுராதபுரம் மாவட்டத்தில் 140 குடும்பங்களும், பொலனறுவையில் 277 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் இவர்களுக்காக சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மழை காரணமாக போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# நாகர்கோவிலில் மோதல்கள்

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது இராணுவத்தினர் நேற்றும் பாரிய ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணை வீச்சுகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலை இடம்பெற்ற இத்தாக்குதலில் 8 விடுதலைப் புலிகள்உயிரிழந்துள்ளனர் என்றும், புலிகளின் 8 பதுங்கு குழிகளை,தாங்கள் அழித்துள்ளனர் என்றும் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. எனினும், நேற்றைய மோதல்கள் தொடர்பாக புலிகள் தரப்பிலிருந்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (சி)

# இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை இன்று வலைப்பின்னலுடன் இணைகிறது

பருத்தித்துறை,டிசெ.24

நெல்லியடி இலங்கை வங்கியின் கணனிமய சேவை ஆரம்பவிழா இன்று திங்கட்கிழமை வங்கி முகாமையாளர் வல்லிபுரம் தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் சே.கணேஸ் கலந்து கொண்டு கணனி மய வங்கிச் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எஸ். ஆனந்தகுமார் அடிகளார், பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா,நெல்லியடி முருகமூர்த்திஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ. எஸ்.கௌரி பாலக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள்.

இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என். சிவரத்தினம், யாழ். பிராந்திய சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், சாவச்சேரி பிரதேசசெயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், பருத்தித்துறை பிரதேச செயலர்ஆர்.வரதீஸ்வரன் வட மராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர்விசெல்வராஜா,நெல்லியடிமத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, பிரபல வர்த்தகர் எம்.சுந்தரலிங்கம்(ஜே.பி) இலங்கை வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், நெல்லியடி , இலங்கை வங்கியின் முதலாவது முகாமையாளர் எஸ்.விக்னராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக்கலந்துகொள்வர். (70,218)

# பிரபா காயமடைந்தமை உண்மையா? இந்தியாவுக்கு தகவல் இல்லையாம்!

புதுடில்லி, டிசெ.24

விடுதலைப் புலிகளின் தலைவர் நவம்பர் மாதம் இலங்கை விமானப்படை மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த தாக நம்பத்தகுந்த தகவல் எதுவும் இந்திய அரசிற்கு கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரபாகரன் காயமடைந்துள்ளார். வெளிநாட்டில் அவர் மருத்துவ சிகிச்சை பெறலாம் என வெளியான தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு எதிரான உளவியல் நடவடிக்கையென இந்திய பாதுகாப்பு அமைப்புகள் கருதுகின்றன.

விடுதலைப் புலிகளின் தலைவரின் 116 மெய்ப்பாதுகாவலர்கள் கொல்லப்பட்டதாக வெளியான செய்தியை (வேடிக்கையென) என இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் நிராகரித்துள்ளன.

இலங்கை மோதலை மிகவும் உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு பிரபாகரன் காயமடைந்திருந்தால் தற்போதைக்குத் தெரியவந்திருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபாகரன் விமானத் தாக்குதலில் காயமடைந்துள்ளார் என்பதற்கான நம்பகத்தன்மை மிக்க புலனாய்வுத் தகவல்கள் எதுவுமில்லை, எதனையும் நாம் முற்றாக நிராகரிக்காத அதே வேளை இலங்கையிலிருந்து வெளியாகும் இந்தத் தகவல்களை ஏற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது என இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (சி)

# இலங்கையில் ஐ.நா.கண்காணிப்பகத்தை ஏற்படுத்த அமெரிக்காவிடம் வலியுறுத்தல்

நியூயோர்க், டிசெ.24

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவதற்கான ஆதரவைக்கோரி மனித உரிமைக் கண்காணிப்பக அதிகாரிகள் அமெரிக்காவில் பிரசார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள னர்.

இலங்கையில் இடம்பெறும் கொலைகள், ஆள்கடத்தல்கள் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பக அதிகாரிகள், இது குறித்து விசாரணை செய்வதற்கு இலங்கை அரசு எதனையும் செய்யவ லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரத்தில் தலையிடுதல் போன்றவற்றிற்காக குரல் கொடுக்க வேண்டிய ஜனநாயக அமைப்புகளும் இலங்கையில் செயலிழந்துள்ளன என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### நாளாந்தம் நால்வர் கொலை

இலங்கையில் 18 முதல் 35 வயதிற்குட்பட்ட தமிழர்கள் கடத்தப்படுகின்றனர் அல் லது நாளொன்றிற்கு நாளாந்தம் நால்வர் என்ற கணக்கில் கொல்லப்படுகின்றனர் என மனித உரிமைக் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த பிரேட் ஆபிரஹாம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆண்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுகின்றனர், சித்திர வதை செய்யப்படுகின்றனர், சிலர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர். அரசு அவர்களது பெயர் விவரங்களை வெளியிடுவதில்லை. இலங்கையிலுள்ள அவசரகாலச் சட்டத்தின் கீழ், குற்றச்சாட்டு சுமத்தாமல் ஒருவரை நீண்ட காலம் தடுத்து வைத்திருக்கக்கூடிய நிலை உள்ளது என ஆபிரஹாம்ஸ் தெரிவித்துள்ளார்.

### கருணாவை பிரிட்டனிலிருந்து நாடுகடத்தக் கூடாது

ஜனநாயக அமைப்புகள் செயலிழந்துவிட்டன அல்லது செயற்படவில்லை என மேலும் குறிப்பிட்டுள்ள அவர், பொலிஸ், நீதிமன்றம் போன்றவை பயனற்றவையாக உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் கருணாவை இலங்கைக்கு நாடுகடத்தினால் அவர் விசாரிக்கப்பட மாட்டார். மாறாக அவர் கொல்லப்படலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ள ஆபிரஹாம் சர்வதேச நீதி நிலைநிறுத்தப்படுவதற்காக பிரிட்டனே அவரை விசாரணை செய்ய வேண்டும் என வும் குறிப்பிட்டுள்ளார். (சி)

# வாகனத் தொடரணியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மார்க் மற்றும் உயர் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினர்.

* குடாநாட்டில் அதிகரித்துச் செல்லும் கொலைகள், ஆள்கடத்தல்கள், கொள்ளைகள்.
* வீதிப் போக்குவரத்துத் தடையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அசௌகரியங்கள்.
* கப்பல் மற்றும் விமானப் பயணங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வேண்டாத தாமதங்கள்

- என்பன குறித்து நேற்றைய சந்திப்பில் விரிவாக தளபதியிடம் எடுத்துக் கூறப்பட்டது.

- முதல்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். அக்குழுக்களுக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும். அத்துடன் விழிப்புக் குழு உறுப்பினர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படும்.

- கொலை, களவுகளை நிறுத்த வசதியாக யாழ். மாநகர சபைப் பகுதியில் பொலிஸார் இரவு, பகல் சேவைளை மேற்கொள்வர்.

- வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய விரும்புபவர்கள் விழிப்புக் குழு உறுப்பினர் மற்றும் கிராம சேவையாளரின் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தால் போக்குவரத்து அனுமதி பெறுவது இலகுவாக்கப்படும்.

மேற்கண்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் நேற்றைய சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மன்னார்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவு பொது மக்களும் பதறியடித்துக்கொண்டு வீடு திரும்பினர். கைதானவர்களின் உறவினர்கள்நூற்றுக்கணக்கில் மன்னார் பொலிஸ் நிலையம் முன்பாகத் திரண்டனர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் உத்தரவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கைதானோரில் 32 பேர் விசாரணைகளின் பின்னர் நேற்றுமாலை விடுவிக்கப்பட்டனர் என்றும் ஏனையோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என் றும் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (சி)

# கருணா விவகாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் சேகரித்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கருணாவிடம் பல மணி நேரமாக பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணை மூலமாகவும் கடவுச்சீட்டின் மூலமும் இலங்கை அரசுக்கு இவ்விடயத்தில் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கருணாவிடம் இருப்பது போலியாகத் தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டு எனக் காட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது போலிக் கடவுச்சீட்டல்ல என்பதை பிரிட்டனின் உள்துறை அலுவலக நிபுணர்கள் உறுதிசெய்துள்ளனர்.

மேலும் குணவர்த்தன என்பவருக்கு விசா வழங்குமாறு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரிய கடிதமும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் கைகளிலுள்ளது.

மேலும், கருணா இராஜதந்திர கடவுச்சீட்டை பெறும் முயற்சியில் தானாகவே இறங்கியிருப்பார் என்பதை பிரிட்டிஷ் அதிகாரிகள் நம்பமறுக்கின்றனர்.

கருணா விவகாரம் வெளியே தெரியவந்த பின்னர் இலங்கை அரசு மௌனம் காத்தமை குறித்தும் பிரிட்டன் சந்தேகம் கொண்டுள்ளது.

கருணா ஹீத்ரு விமான நிலையத்தில் வந்திறங்கியதும் பிரான்ஸ் தூதரகத்தில் உள்ள இலங்கை இராஜதந்திரியொருவரால் வரவேற்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரிட்டனின் அடுத்த கட்ட நடவடிக்கை எதுவாயிருக்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.(சி)

O/L தோற்றியவர்களுக்கான கணனிக்கல்வி
# MsOffice-Internet/ Email-Hardware-FlashMx
# Photoshop-Coreldraw-Pagemaker-HTML
# VB. Net-ASP.Net-PHP/Mysql-GNU/Linux
R.Kumaran-B.SC. Contact No: 0776577359
செருக்கப்புலம் லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
AL/2010
CHE -அன்பழகன் Bio→ அல்போன்ஸ் → பிரபல ஆசிரியர்
PHY -செல்வன் Maths→ சிவகரன் → கண்ணன்
ஆரம்பம்:- 26.12.2007
★நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
Properietor - Poopalasingam

ஆரம்பமாகின்றது AL/2010
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
காலம்:
ஜனவரி 05 (சனி) காலை: 7.30 மணி
ACA கோவில் வாசல், கே.கே.எஸ் வீதி, இணுவில்

# மரண அறிவித்தல்

## தம்பையா முத்துக்குமார் (ஆசாரி)

காளிகோவிலடி, களபூமி, காரைநகரைச் சேர்ந்த தம்பையா முத்துக்குமார் (ஆசாரி) நேற்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா-நாகம்மா தம்பதியினரின் மகனும், கந்தசாமி-பார்வதி தம்பதியினரின் மருமகனும், புஸ்பவதியின் கணவரும், தவமணி (ஜேர்மனி), பாலசிங்கதம், பேரின்பநாயகம், தர்மலட்சுமி, சிவனேசன் (யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி) ஆகியோரின் தந்தையும், கந்தசாமி (ஜேர்மனி), கணேசநாதன், புஸ்பராணி, அருளாம்பிகை, சத்தியபாமா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.12.2007) திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி, களபூமி, காரைநகர்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.